தென்மொழி

நட்பும் பகையும்!

தம்மை முழுமையாய்த் தமிழ்க்குத் தருபவர்
எம்மவர் ஆயினும் எதிர்ப்பவர் ஆயினும்
எம்மூர் ஆயினும் எவ்வூர் ஆயினும்
அம்மையும் அப்பனும் ஆவார், எமக்கு!
அவரே நல்வழி காட்டியும் நமக்கு!

எதையும் கருதா(து) இனத்திற் குழைப்பவர்
புதியோர் ஆயினும் பழையோர் ஆயினும்
முதியோர் ஆயினும் இளையோர் ஆயினும்
விதையும் எருவும் ஆவார், எமக்கு!
வேந்தரும் தலைவரும் அவரே, நமக்கு!

நலன்கள் நாடாது நாட்டை மீட்டிடப்
புலனும் உழைப்பும் பொழுதும் தருபவர்,
இலவோர் ஆயினும் எளியோர் ஆயினும்
வலவரும் மறவரும் ஆவார், எமக்கு!
வாழ்க்கை நண்பரும் அவரே, நமக்கு!

தமிழ்,இன, நாட்டினைத் தந்நலம் கருதி
இமிழ்பகை கைக்கொள இரண்டகம் செய்வார்
சிமிழ்தகைக் குன்றுடைச் செல்வரே ஆயினும்
உமிழ்தகு புல்லியர் ஆவார், எமக்கு!
ஒழிதகு 'பகைவரும் அவரே, நமக்கு!

சுவடி : 22
ஓலை : 3

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை
1-25 உருபா

நமக்கு வந்த மடல்கள்.

0 : 1133 : எனது தனிப்பெரும் மதிப்பிற்குரிய முதல்வா ஐயா அவர்கட்கு, நெறிமுறை-நேர்மை-நயம்-அறம்-கடுமையான உழைப்பு இவற்றில் நம்பிக்கையும், குமுகப் பொது நலம், இனம், மொழி, நாட்டு நலன், தொண்டு இவற்றில் ஆர்வமும் உள்ள சுப. இரா. தமிழ்த்தாசன் எழுதிக்கொண்டது. தாங்கள் திருச்சி வந்திருந்தபோது, தவிர்க்கமுடியாத சூழ்நிலையில் சந்திக்கமுடியாமற் போய்விட்டது. அதற்காக மிகவும் வருந்துகிறேன். தங்களிடம் மிகவும் பணிவன்புடன் வேண்டி, விருப்பிக் கேட்டுக்கொள்வது என்னவெனில், நமது கொள்கை - கோட்பாடு வழி, செயல் முறைகள் எதுவாயினும் சரி, தாங்கள் அருள்கூர்ந்து (டெசோ) தமிழ் ஈழ அமைப்பில் இசைநது தங்களின் தூய தொண்டினை இன்றைய நிலையில், தமிழ் ஈழ மக்களுக்கும், வருங்கால அனைத்து உலகத் தமிழின - மற்றும் உ. த. மு. க வளர்ச்சிக்கும் அளிப்பீர்களெனப் பணிவன்புடன் எதிர்பார்க்கிறேன். மேலும், தங்களைப் போன்றவர்கள் தனிப்பட்ட நிலைமைகளை அகற்றி, மிகவும் கடுமையான காலகட்டத்தில் இருக்கும் தமிழ் ஈழ மக்களுக்கு உதவும் பொருட்டு, (டெசோ) த. ஆ. அமைப்பில், இணைவதே நல்லது. என்னைப் போன்றவர்களின் விருப்பமும், வேண்டுதலும் அதுவே !

என்றும் உண்மையுள்ள, சுப. இரா. தமிழ்த்தாசன்,
மூவானூர், திருச்சி-6.

0 : 1134 : செந்தமிழ்ப் பாவலரேறு ஐயா! வணக்கம். நலம், நலமே வாழி! வண்டமிழ் மொழி, இனம், நாடு, விடுதலை உணர்வுக்கு வித்திட்ட பேரறிஞர் அண்ணா, பெரியார் இவர்கள் தோன்றிய திங்களில், 'செய்தக்க' வினையாற்ற விழைந்து செந்தமிழ் மொழி, இனம், நாடு, சிறந்து ஓங்கி, உலகில் உயர, 'தமிழ்ச்சிட்டு' பரந்து பறக்கவும், தமிழீழ விடுதலைக்கு வித்தாகவும், விடுதலைப் பண்பாடும் 'தமிழ்ச்சிட்டு' இதழுக்குரிய வாழ்நாள் உறுப்பினர் கட்டணமான உரு. 120-ஐ பணவிடை வழி, என் மகன் செல்வன், தே. தமிழ் ஒளி பெயரக்கே விடுத்து மகிழ்கின்றேன். நன்றி!

நிறை அன்பு நெஞ்சுடன், புலவர். கோ. உள் ஒளி, அறி.,இ.ச இ.,
திருப்பத்தூர் [வ.ஆ.]

0 ; 1135 ; அன்புடையீர்! வணக்கம். கல்பாக்கம் நகரில் வசிக்கும், சூரியமூர்த்தி வரைவது. நானும், என் நண்பர்களும் தங்களிடம் நேரிலும், மற்றும் தாங்கள் கல்பாக்கம் வந்தபோதும், உரையாடி இருக்கின்றோம். நாம் உரையாடிய சிக்கல்கள் எல்லாவற்றையும் விட தமிழீழச் சிக்கல்தான் மிகவும் தேவையானதும் -முகாமையானதுமாகும்: எத்தனையோ சிக்கல்களுக்கு இடையேயும், ஈழப் போராளிக்குப் பொருளுதவி, பொருள்கள் உதவி முதலியன செய்து வருகின்றோம். ஆனால், தற்போது நிகழும் சில நிகழ்ச்சிகள்தாம் எங்கள் மனத்தை உறுத்துகின்றன. போராளிகள் அனை

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]



தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்

புரப்பாளர்கள் : தென்மொழி முல்லைவாணன், தென்மொழி ந. முத்துக்குமரனார், தென்மொழி ப. துரையரசன், தென்மொழி நா. இளமாறன், தென்மொழி பழநி-மகிழ்நன், தென்மொழி எசு. ஆர். பிரான்சிசு, தென்மொழி கா. இளமுருகன் தென்மொழி த. தேனியல் செபராசு.

(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.)

சுவடி: 22] உ௦கசு சுறவம் (சன-பிப்-1986) [ஓலை-3]

மொழி, இன, நாட்டுக்குழைக்கும்
பொதுநலத் தொண்டர்களுக்கு !-3



பொதுவாகவே, தமிழினம் இன்னும் தன்னை பொதுஉணர்வுக்கும் மொழி, இன, நாட்டு உரிமை உணர்வுகளுக்கும் தகுதிப்படுத்திக் கொள்ளவே இல்லை. தமிழினத்தில் உள்ள பெரும்பாலார்க்கு ஒரு கும்பல் உணர்வே உள்ளது. நாம் எதற்காக ஒன்றுபடவேண்டும், ஒன்றுபடுவதென்றால் என்ன, எப்படி என்கின்ற விளக்கவுணர்வுகள், நம்மில் நூற்றுக்கு முப்பதுபேர்களுக்காகிலும் ஏற்பட்டிருக்கும் என்று கருத முடியவில்லை. நமக்கிருப்பது ஒரு கூட்டவுணர்வே. தெருவில் வேடிக்கை காட்டும் இடத்தில போவோர் வருவோர் ஒருநொடிப்

பொழுதில் கூடி, மறுநொடிப் பொழுதில் கலைந்து விடுகிற உணர்வே நம்மிடம் உள்ளது. பொதுத்தொண்டைப் பெரும்பாலார் ஒரு பொழுதுபோக்குணர்வாகவே கருதுகின்றனர். ஓர் இடத்தில் கூடி நீண்டநேரம், மணிக்கணக்காக, நாள் கணக்காக, ஒரு கொள்கையையோ, செயலையோ நோக்கி உரையாடுகின்ற அல்லது அறிவு நிலையில் தருக்கமிடுகின்ற உணர்வு வெகு சிலர்க்கே உள்ளது.

கருத்துரையாடல், அல்லது கலந்து தருக்கமுறையில் ஆராய்தல் என்றால் நம்மில் ஒருவரை ஒருவர் எதிர்த்துக்கொள்கிறோம்; சண்டையிட்டுக் கொள்கிறோம்; சட்டெனப் பகைத்துக் கொள்கிறோம். கருத்து வேறுபாடு என்பதை மன மாறுபாடு என்னும் பொருளில் எடுத்துக் கொள்கிறோம். அதற்குத் தலையாய காரணம் நாம் நம்மைத் தவிர வேறு ஒருவரையும் நம்ப மறுக்கிறோம். நம்மில் மூவர் நால்வர் சேர்ந்தால், வேறு ஒருவரின் கருத்துகளைப்பற்றி, ஆய்வு நோக்கில் பேசிக் கொள்ளாமல், அந்த ஆளைப் பற்றியே திறனாய்வு செய்யத் தொடங்குகிறோம். நம் உணர்வால், நம் கோணத்தில் பிறரை எடை போட விரும்புகிறோம். பிறர் உணர்வு எத்தகையது, அவரின் கருத்து எப்படிச் சரியானது அல்லது தவறானது என்னும் ஆராய்வே நமக்கு வேண்டும் இவ்வுணர்வு உண்மையான தொண்டுணர்வுக்கு ஏற்றதில்லை.

இன்னொரு குறைபாடும் நம்மிடை உண்டு. ஒருவரை நாம் நேரிடையாக அறிந்துகொள்ள முனையாமல், பிறர் வழியாக அறிந்து கொள்கிற மனப்பாங்கே நம்மிடத்தில் மிகுதியும் உள்ளது. புறங் கூறுதலை வரவேற்கிறோம்; நம்மிடையும் அந்த உணர்வை வளர்த்துக் கொள்கிறோம். 'குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல்' என்னும் குறளில் பல உண்மைகள் உணர்த்தப் பெறுகின்றன.

நாடுதல் என்பது ஆராய்தல். முதலில் நமக்கு ஒருவரிடம் உள்ள குண நலன்களையே ஆராய்ந்து அறிந்து கொள்கிற உணர்வு வேண்டும். குற்றங்கள் நம் அனைவரிடமும் உறுதியாக உண்டு. எனவே, பிறரின் குணங்களையே முதலில் ஆராய்ந்து அறிதல் வேண்டும். குற்றங்களை ஆராயக்கூடாது. அவ்வாறு ஆராய்ந்து அறிந்து கொள்ளக்கூடிய குற்றங்கள் இருந்தாலும், முதலில் குணங்களையே ஆராய்ந்து அளவிட்டுக் கொண்டு, பிறகு குற்றங்களையும் ஆராய்ந்து அளவிட்டுக் கொண்டு, அவற்றுள் எது மிகுதியான அளவில் உள்ளதோ, அதையே பெரிதாக எடுத்துக் கொள்ளுதல் வேண்டும் என்பதே இத் திருக்குறளின் கருத்தாகும். பெரும்பாலும் நம்மில் மிகப்பலர் இவ்வாறு செய்வதில்லை. முதலில் ஒருவரிடம் இருக்கின்றதாகத் தாம் கருதிக்கொள்ளும் குற்றங்களையே துருவித் துருவி ஆராயத்தொடங்கி விடுகின்றனர்.

குற்றம் வேறு; தவறு வேறு; பிழை வேறு. பிழை இயல்பாக நேர்வது; தவறு தாம் உணராமல்-அறியாமல் செய்வது; குற்றம்தாம் உணர்ந்து, அறிந்தே செய்வது. பிழை மறக்கக் கூடியது; தவறு மன்னிக்கக் கூடியது; குற்றம் தண்டிக்கக்கூடியது. மேலும் பிழை நேராமல் இருப்பதற்கு விழிப்புணர்வு தேவை; தவறு நேராமல் இருப்பதற்கு எச்சரிக்கை தேவை; குற்றம் நேராமல் இருப்பதற்குப் பாதுகாப்பு தேவை. பிழையும்-தவறும் குற்றம் ஆகா. நம்மில் நூற்றுக்கு நூறு பேர் பிழைகள் செய்கிறோம், நூற்றுக்கு எண்பது பேர் தவறுகள் செய்கிறோம்; நூற்றுக்கு அறுபது பேர் குற்றங்கள் செய்கிறோம். இந்த அறுபது பேரில் நாற்பது பேர் தண்டனை பெற்ற பின்னும், மீண்டும் குற்றம் செய்கிறோம். நாற்பது பேரில் இருபத்தைந்து பேர் குற்றங்களையே வாழ்க்கையகக் கொண்டிருக்கிறோம். இறுதி இருபத்தைந்தில், ஐந்து பேர் குற்றங்கள் செய்வதுமன்றிக் கொடுமையாகவும் அவற்றைச் செய்பவர்களாக இருக்கின்றார்கள். நம் குமுகாய அமைப்பு அப்படி.

இந்த நிலையில், நாம் நம்முடைய மனவுணர்வுகளையும், அறிவுத் திறப்பல்களையும், செயல் திருட்டுகளையும் மறைத்துக்கொண்டு, பிறரையே நாள் முழுவதும், காலம் முழுவதும் எடைபோட்டு, அவரவர்களின் பிழைகளையே தவறுகளாகவும், தவறுகளையே குற்றங்களாகவும், குற்றங்களையே கொடுமைகளாகவும் பன்னிப் பன்னிப் பேசிக்கொண்டு திரிகிறோம். இதனால், பிழை செய்யாதவன் பிழை செய்யும்படி தூண்டப்படுகிறான்; பிழை செய்பவன் தவறு செய்யும் வழியை நாடுகிறான்; தவறு செய்பவன் குற்றம் செய்யக் கட்டாயப் படுத்தப்பெறுகிறான்; குற்றம் செய்பவன் கொடுமையாளனாக மாற்றப் பெறுகிறான்; கொடுமை செய்பவன் கொலைகாரனாக உரம் பெறுகிறான். குமுகாய மனவியல்படி, சிறு சிறு பிழைகளும், தவறுகளும் பெரும் பெரும் குற்றங்களாகவும், கொடுமைகளாகவும், கொலைகளாகவும் இவ்வாறுதாம் மாற்றம் பெறுகின்றன என்பதை நாம் உணர்தல்வேண்டும்.

குற்றம் கூறும் மனவுணர்வு, ஆசையாகத் தோன்றி, அவாவாக வளர்ந்து, பேராசையாக உருமாறிப் பொறாமையாக உரம் பெற்றுக் காழ்ப்பாகக் காழ்த்துக் கொடுமையான விளைவுகளைச் செய்கிறது. பிறரைக் குற்றமே கூறுகிறவன், நாளடைவில் அதைக் கவர்ச்சியாக வடிவப் படுத்துகிறான்; அதற்குப் பொய்ப்பையும் புளுகையும் கலந்து மினுக்கேற்றுகிறான்; அச் செயல் வெற்றிபெறும் பொழுது அதையே தொடர்ந்து செய்து, வழக்கமாக்கிக் கொள்கிறான்; பிறகு அந்த வழக்கத்தையே வாழ்க்கையாக்கிக்கொண்டு, நடமாடும் நச்சு மரமாக உயிர் வாழ்க்கை நடத்துகின்றான். இதைத்தான் முழுநிலையில், 'புறம் கூறிப் பொய்த்து—உயிர் வாழ்தல்' என்று சுருங்கக் கூறுவார் திருவள்

ளுவப் பேராசான். திருக்குறளில் 'அழுக்காறாமை'க்கு அடுத்து 'வெஃகாமை'யையும், அதனையடுத்துப் 'புறங்கூறாமை'யையும், அதனையடுத்துப் 'பயனில சொல்லாமை'யையும், அதனையடுத்துத் 'தீவினையச்சத்'தையும் முறைப்பட வைத்துக்கூறும் பாங்கால், குமுகாயக் குற்றங்களின் பல வளர்ச்சிப் படிநிலைகளை விரிவாக உணர்த்துதலை நாம் நுணுகி உணர்தல் வேண்டும்.

குற்றத்தை விடக் குற்றங்கூறும் மனப்பான்மையே பெரிதும் அஞ்சத் தக்கது; கடியத்தக்கது; தவிர்க்கத் தக்கது. ஓரிடத்தில் உள்ள இழிவை ஊர் முழுவதும் தெளிக்கின்ற அருவருப்பான பணியைப் புறங்கூறுபவர்கள் செய்கிறார்கள். நச்சுக்குச்சில் (பாக்டீரியாக்)களைப் போல் இவர்கள், நச்சுத் தன்மையை அனைவர் தூய மனங்களிலும் விளைவித்து, அதனை மறைமுகமாக வளர்த்துக் குமுகாயத்தையே பனநோய்க் கூடமாக மாற்றுகின்றனர். புறங் கூறுகின்றவர்களை மிகுவாகக் கடிந்து கீழ்மைப் படுத்துகின்றார் திருவள்ளுவர்.

'நெஞ்சத்து அழுக்காறு உடையவன்' [161]
'பிறனாக்கம் பேணாது அழுக்கறுப்பவன்' [163]
'அழுக்காற்றில் ஏதம் (துன்பப்) படுபவன்' [164]
'கொடுப்பது அழுக்கறுப்பான்' [165]
'அழுக்காறு என ஒரு பாவி' [168]
'அவ்விய நெஞ்சத்தான்' [169]
'அழுக்கற்று அகலாதவன் (வளராதவன்) [170]
'நடுவின்றி(நாயமின்றி)நன்பொருள் வெஃகுபவன் [171]
'பழிப்படுவ செய்பவன்' [172]
'சிற்றின்பம் [சிறு சிறு இன்பங்களை] வெஃகுபவன்' [173]
'இலமென்று வெஃகுபவன்' [174]
'வெஃகி [பேராசை கொண்டு] வெறிய
[வெறித்தனமாக] செய்பவன்' [175]
'பொருள் வெஃகிப் பொல்லாத சூழ்பவன்
[பொல்லாதவற்றையே எண்ணித் திரிபவன்] [176]
'பிறன் கைப்பொருள் வேண்டுபவன்' [178]
'அறன்அழீஇப் [காணாதவிடத்துப் புறங்கூறிக்
கண்டவிடத்துப் பொய்யாக நகைப்பவன்' [183]
'முன்னில்லாமல் பின்னாகப் பழிப்பவன்' [184]
'புறஞ் சொல்லும் புன்மை [புல்லிய தன்மையை]
உடையவன்' [185]
'பகச் சொல்லி [வேறுபடுத்திக்கூறி]க் கேளிர்
[நண்பர்களை]ப் பிரிக்கின்றவன்' [187]
'துன்னியார் [நெருங்கியிருந்தவர்] குற்றங்களைத்
தூற்றும் மரபினன் [வழக்கத்தைக்கொண்டவன் [188]
'புறன்நோக்கிப் புன்சொல் உரைப்பவன்' [189]
'ஏதிலார் குற்றம்போலத் தன் குற்றத்(தையு)ம்
காணாதவன்' [190]

'பலரும் வெறுக்கும்படி பயனில்லாதவற்றையே சொல்லுபவன்' [191]

'பலர் கூடியவிடத்தெல்லாம் பயனிலாதவற்றையே சொல்பவன்' [192]

'பயனில்லாதவற்றை [மிக விரித்து] பாரித்து உரைப்பவன்' [193]

'பண்பில்லாத சொற்களைச் சொல்லுபவன்' [194]

'மக்கள் பதடி [பதர்]' [196]

'அரும் பயனை ஆராயும் அறிவில்லாதவன்' [198]

'மயக்கம் தீராத மனமும் மாசுகள் நீங்காத அறிவும் உடையவன்' [199]

'பிறர்க்குச் செய்யும் கேடுகளைப் பற்றியே ஆராய்பவன்' [204]

'பகையான உணர்வையே செயலாகச் செய்பவன்' [207]

'தன்னையே மிகுதியும் விரும்புகிறவன்' [209]

'அறம்பிறழ்ந்து பிறர்க்குத் தீயவையே செய்பவன்' [210]

— வேரரிப்பாக புறங்கூறுதல் என்னும் உணர்வே பொதுத் தொண்டுக்கு முதற்பகையாக இருப்பதாலும், அந்தத் தீயவுணர்வு பற்றுவதே பொதுவுணர்வுக் களத்தில்தான் என்பதாலும், அந்த இழிவான குமுகாயக் கேடான மனவுணர்வு வளர்ச்சியாலேயே நம் தமிழினத்தில் பலவேறு மனப்பிளவுகளும், கொள்கைப் பிளவுகளும் உருவாகி வளர்ந்து, இவ் வினத்துக்குத் தொண்டு செய்ய வருபவர்களையே ஒன்றுசேர விடாமல் செய்வதாலுமே, இவ் வுணர்வு பற்றி இவ்வளவு விரிவாகவும் விளக்கமாகவும் கூற வேண்டி வந்ததென்க. நம் தமிழிலும், தமிழர்களிடையிலும் இவ் வுணர்வு மிகுந்திருப்பதால்தான். வேறு எந்த இனத்தின்-மொழியின் -அறநூல்களிலும் கூறப்பெறாத அளவிலும், கடுமையான சொற்களிலும் இக் குமுகாயக் குற்றம் திருவள்ளுவர் என்னும் தமிழின நலம் விரும்பிய பெரும் பேராசானால் சுட்டிக் காட்டி உரைக்கப்பெற்றது என்க. மேலோட்டமாகப் பார்ப்பவர்களுக்கு இக் குமுகாய மனவுணர்வால் ஏற்படும் இனநலப் படிநிலை வளர்ச்சித்தாக்கம் விளங்காது; ஆனால் ஆழ்ந்து பார்ப்பவர்களுக்கு இது புலனாகாமல் போகாது. இந்தக் கீழ்மையான உணர்வுதான் நம்மில் ஒருவர்க்கொருவர் மேல் அவநம்பிக்கையை உண்டாக்கி இருக்கின்ற ஒற்றுமையைச் சிதைப்பதுடன்; மேலும் ஒன்றுதல் ஏற்படாமலும் செய்து வருகிறது. ஒற்றுமைக்கு நம்பிக்கையே தேவையான அடிப்படை உணர்வாகும் என்று அறிந்துகொள்க. இதுபற்றி இன்னும் கொஞ்சம் விளக்குவோம்.

(தொடரும்)

அன்பர்கள் கவனிக்க...

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டுபேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலையில் 5-மணிக்குமேல், எழுதி இசைவுபெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக்கொள்கிறோம். — அமைச்சர்.

செய்திகள்

1. மாணவர் தமிழ்ப்பேரவை தொடக்கவிழா : தங்கவயல் முதல்நிலைக் கல்லூரி :

கடந்த 5-10-85 காரிக்கிழமை காலை 10 மணியளவில் கோலார், தங்கவயல் முதல்நிலைக் கல்லூரியின், மாணவர் தமிழ்ப் பேரவை தொடக்கவிழா மிகவும் சீரும் சிறப்பாக நடைபெற்றது. முற்பகல் முழுவதும் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சியும் கலை நிகழ்ச்சியும் நடைபெற்றன. விழாவுக்குக் கல்லூரி முதல்வர் பேராசிரியர் சி. எச். சவுக்கார் அவர்கள் தலைமையேற்றார். தொடக்கத்தில் மாணவர் செயலர் திரு. இராசகுமார் (க.இ) உணர்ச்சி வடிவமான வரவேற்புரை நிகழ்த்தினார். தலைவரின் ஆங்கில முன்னுரைக்குப் பின் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் திரு. இரா. நடராசனார் க.மு. வரவேற்புச் சிறப்புரை நிகழ்த்தினார். மாணவர் துணைத்தலைவர் திரு. சி. மதிவாணன் (அறி.இ) ஆண்டறிக்கை படித்தார்.

அதன்பின், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தைச் (PLOT) சேர்ந்த தமிழீழப் போராளி திரு. வசந்தன் தமிழீழத்தில் நடைபெறும் கொடுமைகளை விளக்கிக் கருநாடக மக்களும், மாணவர்களும் தமிழீழப் போராட்டத்திற்கு ஆதரவும் உதவியும் செய்து, தங்கள் விடுதலைநோக்கத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளும் வகையில் உணர்வுரையாற்றினார்.

இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் ஏறத்தாழ ஒன்றரை மணிநேரம் தமிழ்மொழி, வரலாறு, இனவீழ்ச்சி போன்ற நிலைகளை விளக்கிச் சிறப்புரை நிகழ்த்தினார். ஏறத்தாழ மூவாயிரம் மாணவ, மாணவியர் கொண்ட கல்லூரிக்குப் பாவலரேறு வருகை தருவது இது மூன்றாவது முறையாகும். தொடக்க காலத்தில் முதல் முறையாகப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் வந்திருந்தபொழுது, இக் கல்லூரியில் மாணவர்களாக இருந்த சிலர் இக்கால் இங்கு ஆசிரியர்களாகப் பணியாற்றுவதை அவ்வாசிரியர்கள் நினைவூட்டிக்கூறி மகிழ்ந்தனர். பகல் 2 மணி ஆகியும் ஈராயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள், கல்லூரி வளாகத்திற்குள் அமைந்த அழகிய விழாப் பந்தலுக்குள்ளும், அதுபோதாமல் வெளியே வெயிலிலும் நின்று உணர்வுரையைக் கேட்டதை வருத்தமுடன் பாவலரேறு தம் பேச்சிடையில் சுட்டினார்கள்.

காலையில் வெங்காலூரிலிருந்து தொடர்வண்டி வழியாகப் பாவலரேறு அவர்கள் வருவதைத் தெரிந்து ஏராளமான மாணவ மாணவியர்கள் தொடர்வண்டி நிலையத்திற்கே வந்து வரவேற்றதும்; அவர் கல்லூரி முதல்வரின் அறையிலிருந்து பந்தல் மேடைக்கு

வரும்வரை, ஆயிரக்கணக்கான மாணவ, மாணவியர் 2 வரிசைகளாக நின்று, பாவலரேறு அவர்களின் உருவத்தை மூடுகின்ற அளவுக்குப் பல்வேறு வண்ணப் பூக்களைச் சொரிந்து வாழ்த்தொலிகள் எழுப்பித் தங்கள் அன்பையும் ஆதரவையும் தெரிவித்ததும், இவ்விழா நிகழ்ச்சிக்கு, வெங்காலூர் உ.த.மு.க. அமைப்பாளரும், வெங்காலூர் தாமரை கலை இலக்கியமன்றத் தலைவரும் ஆகிய திரு. பொற்செழியன், அவர்களும் செயலர் திரு. சேரலாதன் அவர்களும், ஆண்டர்சன் பேட்டையிலிருந்து, இந் நிகழ்ச்சிக்கு மிகவும் உறுதுணையாகவிருந்த நீண்ட நாளைய தென்மொழி அன்பர் திரு. கி வெற்றிச்செல்வன் அவர்களும் பாவலரேறு அவர்களுடன் இணைந்து வந்ததும் குறிப்பிடக்கூடிய மகிழ்ச்சிதரும் நிகழ்ச்சிகளாகும்.

நிகழ்ச்சிகளின் முடிவில் மாணவியரின் ஆடல் பாடல் நிகழ்ச்சிகள் விழாவை மேலும் சிறப்புறச்செய்தன, கலை நிகழ்ச்சிகளைக் கல்லூரி விரிவுரையாளர் திரு. கு. வணங்காமுடி அமைத்திருந்தது பாராட்டக் கூடியது. இறுதியில் கல்லூரிப் பேரவைத் துணைச் செயலர் திரு. அந்தோணி (க.இ) நன்றியுரையுடன் நிகழ்ச்சிகள் பிற்பகல் இரண்டரை மணியளவில் நிறைவுற்றன.

2. அப்பாச்சியப்பன் — சுசீலா — வாழ்க !

சென்ற துலை 20 (15-11-85) வெள்ளிக்கிழமை காலை 6 மணியளவில், சிங்கராம்பாளையம், மறைந்த கணபதி அவர்களின் மகன் செல்வன் அப்பாச்சியப்பன் அறி. இ அவர்களுக்கும், திருப்பூர், மேட்டுப்பாளையம் செல்லப்பன் அவர்களின் மகள் செல்வி அங்கம்மாள் என்ற சுசிலாவுக்கும், திருப்பூர் பங்கையற்செல்வி திருமண மண்டபத்தில் நடந்த திருமணத்திற்கு, வரவேற்பு அன்று பகல் 11 மணியளவில், கிணத்துக்கடவு பொன்மலை, வேலாயுதசாமி திருமண மண்டபத்தில் திரு அ. சிவசாமி அவர்கள் தலைமையில் நடந்தது. திரு. அ. சுந்தரம் (கோவை மாவட்டச் செயலர், உழவர் உழைப்பாளர் சங்கம்) அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர். திருவாளர்கள் கோவிந்தசாமி (பொறியாளர்), மா. ஆறுமுகம் (கோவை மாவட்ட உ. த. மு. க. பொருளர்) ஆகியோர் வாழ்த்துரையைத் தொடர்ந்து, பாவலரேறு பெருஞ்சித்திரனார் சிறப்புரை நிகழ்த்தி மணமக்களை வாழ்த்திப் பேசினர். திரு. இராமு அவர்கள் நன்றியுரையுடன் நிகழ்ச்சி இனிது நிறைவுற்றது.

3, கி. சீரங்கராயன் — ப. சுடர்ச்செல்வி — வாழ்க !

கடந்த நளி 9-ஆம் பக்கல் (24-11-85) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில், கோவை எம்.எசு.சி. திருமண மண்டபத்தில் நெடுநாள் தென்மொழி அன்பரும், தீவிர உ.த.மு.க. தொண்டரும், தாராபுரம் தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் இதழ்களின் முகவரும், ஆகிய திரு. கி. சீரங்கராயன் அவர்களுக்கும், அரசம்பாளையம் திரு. பழனிச்சாமி அவர்களின் மகள் செல்வி ப. சுடர்ச்செல்வி (சோதி இலக்குமி)க்கும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் தலைமையில் திருமணவிழா சிறப்புற

நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தி திருவாளர்கள் : புலவர் ந. இரா. தமிழவேள், சு. முத்துச்சாமி (தலைவர் தமிழக ஆசிரியர் கூட்டணி, தாராபுரம்), தென்மொழி ப. அறவாழி, புலவர் அறிவுடைநம்பி, தென்மொழி க. தமிழப்பன், தென்மொழி ந. முத்துக் குமரனர் தென்மொழி ப. துரையரசன் தென்மொழி ம. ஆறுமுகம் தமிழீழப் போராளி க. சிவபாலன் ஆகியோர் உரையாற்றிய பின்னர் பாவலரேறு அவர்களின் நிறைவு வாழ்த்துரைக்குப் பின் திரு. கி. முருகன் நன்றியுரைகூறி நிகழ்ச்சியை நிறைவு செய்தார்.

4. பாவலர் அருள். செல்லத்துரையின் 'இயேசுபிரான் பிள்ளைத்தமிழ்' நூல் வெளியீட்டு விழா!

திருச்சிராப்பள்ளி தமிழ்ச்சங்கத்தில் பாவலர் அருள். செல்லத்துரையின் 'இயேசுபிரான் பிள்ளைத்தமிழ்' நூல் வெளியீட்டு விழா தி.பி. 2016 நளி 16 (1-12-85) ஞாயிறு மாலை 6 மணியளவில் சீருற நடைபெற்றது.

திருச்சி ஆயர் மேதகு தாமசு ஆண்டகை அவர்கள் நூலை வெளியிட, திருச்சி தூய சின்னப்பர் இறையியல் கல்லூரியின் தாளாளர் திருமிகு இலாய்பரட்டு மிராந்தா அடிகள் முதற்படியினைப் பெற்றுக்கொண்டார்கள்.

கருவூர் வட்ட உ.த.மு.க. செயலர் பாவலர் திரு. கடவூர் மணிமாறன் அவர்களும், நெல்லைத் தனித்தமிழ்க் கழகச் செயலாளர் பேராசிரியர் திரு. பா. வளனரசு அவர்களும், திருச்சி ஊரக முத்தமிழ் மன்றச் செயலர் பாவலர். நடுவை. பரமசிவம் அவர்களும் பாவலர். மரியதாசு அவர்களும் நூலைப் பல்வேறு நிலைகளில் ஆய்ந்து பாராட்டி வாழ்த்துரை வழங்கினார்கள்.

விழாவில் பாவாணர், பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆகியோர் தம் தனித்தமிழ்த் தொண்டு குறித்தும் பாவலரேறு அவர்களின் கொள்கையுணர்வுமிக்க பாடல்கள் குறித்தும் விரிவாகப் பேசப்பெற்றன.

'இயேசுபிரான் பிள்ளைத்தமிழ் நூலினுள் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் பாராட்டுப்பா முகாமையாக இடம் பெற்றிருப்பது நூலுக்குரிய தனிச்சிறப்பாகும்.

நூலாசிரியர் பாவலர். அருள். செல்லத்துரை அவர்களுக்கு, செங்கை. செந்தமிழ்க்கிழார் உள்ளிட்ட பல தமிழன்பர்கள் கைத்தறி ஆடை அணிவித்து மகிழ்ந்தார்கள்.

பாவலர் அருள். செல்லத்துரை அவர்கள் பாராட்டுக்கு நன்றி தெரிவித்தும் தம் தனித்தமிழ் இயக்க சடுபாடு குறித்து விளக்கப்பேசியும் ஏற்புரை வழங்கினார்கள்.

நகரில் வாழும் தமிழன்பர்களும் தமிழாசிரியர்களும் பிற அலுவலர்களும் வருகை தந்து நூல் வெளியீட்டு விழாவைப் பெரிதும் சிறப்பித்தனர்.

செய்தி:— கடவூர் மணிமாறன், செயலர். உ.த.மு.க. கருவூர்.

இவர்தாம் பெருஞ்சித்திரனார்!

புலவர். திருக்குறள் நாவை சிவம் க.மு.

நிறைமலையாம் மறைமலையார் தோற்று வித்து
நின்றிருந்த தனித்தமிழின் இயக்கந் தன்னை
நிறைபுலமைத் தமிழ்க்கதிரோன் பாவா ணர்தம்
நிகரில்லாத் தலைமையின்கீழ் தொடங்கி வைத்து,
நறைபழுத்த தீந்தமிழின் வாழ்விற் கென்றே
நலன்களெலாம் துறந்துவிட்ட சான்றோன்! வீரப்
பறையொலித்துத் தமிழிசைக்கும் அறிவு வேங்கை
பழகுதமிழ்ச் சித்திரனார் இவர்தாம் பாரீர்! 1

நேர்வகிடும் கருத்தடர்ந்த முடியும், அன்பின்
நிழலாடும் விழியுக்கண் ணாடி போட்ட
சீர்முகமும் அருள்நோக்கும், கனிவு சான்ற
சிரிப்புதிர்க்கும் நல்லிதழும் அரிமா வைப்போல்
ஊர்புகழும் நறுந்தாடி மீசை கொண்டும்
ஒண்மைநடை சிவந்தநிற உருவம் பெற்றும்
பார்மகிழத் தமிழ்பரப்பும் ஆற்றல் வேழம்
பண்புபெருஞ் சித்திரனார் இவர்தாம் பாரீர்! 2

தென்மொழியாம், தமிழ்நிலமாம், தமிழின் சிட்டாம்
திசையெங்கும் இசைபாடும் இதழ்க ளாலே
தொன்மொழியாம் தனித்தமிழால் இனவு ணர்வால்
துணிச்சலுடன் எழுச்சிதரும் மெய்ம்மைப் பித்தன்!
புன்மொழிக்கும், எதிர்ப்புகட்கும் துவண்டி டாமல்
பொதுத் தொண்டில் நடைபோடும் துரைமா ணிக்கம்!
தென்மொழியே குறிக்கோளாய்க் கொண்ட செம்மல்!
தேன்றமிழின் சித்திரனார் இவர்தாம் பாரீர்! 3

நாடுமொழி இனமிவற்றை வென்றெ டுக்க
நயவுரைநூல் பலதந்தோன்! பேச்சில் வல்லோன்!
பீடுதமிழ்ப் பாவேந்தர் திறனுக் கொப்பப்
பெருங்கழகப் புலவரினும் உணர்வாய்ப் பாடல்
பாடுவதால் பாவலருள் ஏறாய் நிற்போன்!
பைந்தமிழ்க்குக் காவலராய் முனைந்து நிற்போன்!
நாடுதமிழ் நாடுகாணத் துடிக்கும் செங்கோ
நல்லபெருஞ் சித்திரனார் இவர்தாம் பாரீர்! 4

உள்ளுதொறும் சுவைகற்ப னையாம், ஊற்றும்
உயர்பள்ளிப் பறவைகள்,பா வியமாம் கொத்தும்,
எள்ளலிலா எண்சுவைஎண் பதுவும் மக்கள்
ஏற்றமுற உலகியலின் நூறும், நெஞ்சில்

நாடகம் தொடர் — 7

கொய்யாக்கனி

நாடக ஆக்கம் : அதியமான்.

[பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் பாவியம்]

காட்சி — கக

உறுப்பினர்கள் : 1. கிழவர் 2. கண்ணையன் 3. வள்ளி.

இடம் : வீடு.

வள்ளி : தாத்தா சாப்பிட வேண்டாவா ?

கிழவர் : ஆம், சோறு வை.

வள்ளி : (இலை எடுத்து விரித்து உணவு வைக்கிறாள்.) தாத்தா சாப்பிட வாருங்கள்.

கிழவர் : (அமர்ந்து சாப்பிடுகிறார்.)

வள்ளி : (உணவு வழங்குகிறாள்.)

கிழவர் : உண்ட பின், வெற்றிலை போட்டுக்கொண்டு திண்ணையில் அமர்ந்துகொண்டிருக்கிறார்.)

கண்ணை : (வருகிறான்.) தாத்தா !

கிழவர் : (வெற்றிலையைச் சுவைத்துக்கொண்டு) கண்ணையனா ! வா - வா, அமர் !

(முன் பக்கத் தொடர்ச்சி)

துள்ளுகொய்யாக் கனியும்,கனிச் சாறும், பெண்மைத்
துலங்குமக புகுவஞ்சி, ஐயை யைப்பேரல்
தெள்ளுதமிழ் நலம்படும் நூல்கள் தந்த
தேர்ந்தபெருஞ் சித்திரனார் இவர்தாம் பாரீர் ! 5

உலகமெலாம் வாழுகின்ற தமிழி னத்தின்
ஒளிபடைத்த வாழ்விற்கே குரலெ ழுப்பும்
கலகமெதும் விளைக்காத உண்மை யான
கற்கண்டுக் கொள்கைகளாம் ஏழு கொண்ட
''உலகத்தமிழ் இனமுயர்த்தும் கழகம்'' என்னும்
ஒப்பரிய உழைப்பியக்கம் தோற்று வித்தோன் !
உலகமெலாம் சுற்றிவந்து தமிழ்பு ரக்கும்
உயர்அறிஞர் சித்திரனார் இவர்தாம் பாரீர் ! 6

(தி.பி. 2016, மடங்கல், 8 [24-8-85] காரிக்கிழமை, கருவூர் வட்ட உ. த. மு. க. தெ டக்கவிழாப் பாட்டரங்கில் 'பாவலரேறு' பற்றிப் பாடிய பாடல்களில் ஒரு பகுதி.)

கண்ணே : (உட்கார்ந்துகொண்டு) தாத்தா ...வள்ளியை எனக்குத் தருவதைப்பற்றி ?... உண்டு, இல்லையென விடை வேண்டும். நாள் தவருமல், நான் இங்கு வருவதும், போவதும் வீண் வேலை.

கிழவர் : கண்ணேயா ! செருப்புத் தேய அலைந்தால்தான், ஒரு பெண்ணை அடைய இயலும். ஏன் விரைவு படுத்துகிருய் ? திருமணத்திற்கு உள்ளம் வேண்டாவா ? வள்ளியிடம் கேட்போம்.

வள்ளி : (குடிலுக்குள்ளிருந்து வெளியில் வந்து) உங்களுக்கு வேறு வேலை இல்லையா தாத்தா ! எனக்குத் திருமணத்தின் மீது, இப்போது விருப்பம் இல்லை.

கண்ணே : நீ என்ன ? சிறு பிள்ளையா ? நீ என்னை மணந்து கொண்டால், எங்ஙனம் வாழலாம் தெரியுமா ? வேண்டிய பொருளைக் கேட்டால், மூச்சு விடுமுன் தேடி வரும் ; உன் மடிக்கு.

வள்ளி : பொருளுக்கு மயங்கும் இருள் நெஞ்சு எனக்கில்லை.

கண்ணே : பொருள்தானே, வாழ்க்கையில் மூகாமை.

வள்ளி : அஃது உன்னைப்போன்ற சீத்தைகளுக்கு ! (கீழ் மக்கள்)

கண்ணே : பொருளில்லையென்ருல், இவ்வுலகம் இல்லை தெரியுமா ?

வள்ளி : அருளில்லானிடம் பொருள் இருந்து என்ன பயன் ? அருளாளனிடம் ஒரு நொடி வாழ்ந்தால் போதும். அருளோடு பொருளும் சேர்ந்தால்தான் வாழ்க்கை !

கண்ணே : வாழ்வு என்பதே பொருளை வைத்துத்தான் !

வள்ளி : உள்ளத்தில் இருளும் ; இல்லத்தில் பொருளும் இருந்தால் பொல்லாத செயலைத்தான் செய்யும்.

கண்ணே : அருளை எவன் விரும்புகிருன் ?

வள்ளி : அதனுல்தான் ஆண்டான், அடிமை என்ற குமுகாயச் சூழல் இருக்கிறது; தமிழகத்தில்.

கண்ணே : அந்தக் கவலை உனக்கெதற்கு ? உனக்கு வேண்டுவது இன்பந் துய்க்கப் பணம்.

வள்ளி : சீ! பணத்தையே கூட்டி அடைகாத்துக்கொள்! அருள் விரும்பாப் பெண்கள், பொருளுக்காக ஓர் ஆடவனை விரும்பும் பொது மகளிர் யாராவது இருந்தால், அவர்களில் ஒருத்தியைத் தேடிப்பார் ! போ.

கண்ணே : வள்ளி, நான் யார் தெரியுமா ?

வள்ளி : தெரியும். நீ ஒரு செருக்கன் ! அன்பு பற்றி அறியா மூடன்! கள் குடிகாரன்! மயக்கம் கொண்டலையும் காமுகன் !

கண்ணை : எப்படி வேண்டுமானாலும், பேசிக்கொள். இறுதியாகக் கேட்கிறேன். என்னை மணந்துகொள்ள முடியுமா ? முடியாதா ?

வள்ளி : முடியாது..முடியாது...முடியாது !.

கண்ணை : நான் நெருப்பு !

வள்ளி : நான் தண்ணீர். என்னிடம் உன்னுரிமை செல்லாது.

கண்ணை : பார்க்கிறேன்.

வள்ளி : நீ, அறிவுக் குருடன். கெட்டதைப் பார்ப்பாயே தவிர, நல்லதைப் பார்க்கத் தெரியாதவன்.

கண்ணை : எப்படித் தெரிகிறது ?

வள்ளி : உன் பேச்சிலிருந்து தெரிகிறது.

கண்ணை : வள்ளி ! வாய் இருக்கிறது என்பதால், கண்டபடி பேசாதே !

வள்ளி : பெண்ணிடம் பேசத் தெரியாத குண்டன்! உன்னிடம் இப்படித்தான் பேசவேண்டும்.

கண் : வள்ளி, சினக்காதே ! நான் பரபரப்பில் பேசிவிட்டேன்.

வள்ளி : அஃது உன் வழிவழிப் பழக்கமாச்சே. பணம் படைத்தவனுக்குப் பரபரப்புத்தான் இருக்கும். அதனால்தான் பணஞ்சேர்ப்பான். பரபரப்படைவான். பின் பாழாய்ப் போவான்.

கண் : இதையெல்லாம் உன்னிடம் யார் கேட்டது. என்னை எப்படியும் ஏற்றுக்கொள். பணம் எவ்வளவு வேண்டுமானாலும் தருவேன். இந்த வீட்டையே, மாடியாக மாற்றித் தருவேன். என்னிடம் மிகுதியாகப் பணம் உண்டு.

வள் : சொல்லுகிறேன் கேள் ! அன்பு கொண்ட உள்ளமும், அறிவோடு வாழும், நற்குடிப் பிறப்பும் சேர்ந்தால்தான் நல்ல பண்போடு வாழலாம்.

கண் : என்னிடம் நல்ல அன்பு இல்லை என்று சொல்லுகிறாய் ?

வள் : அன்பு உள்ளவனைப் போல நடிக்கிறாய் ! நல்ல குடியில் நீ பிறந்தவனாகவும் தெரியவில்லை.

கண் : என் குடியும் சரியில்லை என்று சொல்லுகிறாய் ?

வள் : ஆமாம். ஆமாம். ஆமாம்.

கண் : நீ சொல்லுவது, எனக்கொன்றும் புரியவில்லையே ?

வள் : தம்பி கண்ணையா ! புரியவே புரியாது. ஈரோட்டில் பகுத்

தறிவுப் பள்ளி இருக்கிறது. அங்கு போய்ப் படித்துவிட்டு வா. போ. உன்னிடம் பேச நேரமில்லை, நான் போகிறேன்.

கண் : தாத்தா, நீரென்ன பேசவே இல்லை. வேடிக்கை பார்க்கிறீர். தாத்தா உம் பெயர்த்தி என்னை தம்பி கண்ணையா என்கிருளே ! (வள்ளியைப் பார்த்து, விரலைக்காட்டி) இரு. இரு. உன்னை ஒரு கை பார்க்கிறேன். (போய்விட்டான்)

காட்சி கஉ

உறுப்பினர்கள் 1. குடிகாரன்-1, 2. கருப்பண்ணன், 3. கண்ணையன், 4. குடிகாரன்-2, 5. குடியாதவன்-1, 6. 5 பேர் (குடிக்கும் கும்பல்) 7. கள் விற்பவன்.

இடம்: கள்ளுக்கடை.

நிலை : குடித்துக்கொண்டு கும்மாளம் போடுகிருர்கள்.

குடி-1 : (மற்றவர்களைப் பார்த்து) ஏய் ! வாங்கடா ! பழைய மொந்தையில் புதிய கள். ஓடி வா! குடிக்கலாம்; நன்ருகக் குடிக்கலாம்.

குடி-2 : (ஓடி வந்து ஓலைப் பட்டையை ஏந்தி, கள் விற்பவன்முன் குனிந்து நின்று) விடு ஐயா இதில் ஓர் அரைப்படி !

கள் விற் : (மொந்தையில் அளந்து பட்டையில் விடுகிருன்)

குடி-2 : (குடித்துவிட்டு) இன்னும் (பட்டையை ஏந்தி) இதில் விடு ஒரு கால்படி.

கள் விற் : (மொந்தையில் அளந்து பட்டையில் விடுகிருன்) குடி, வயிறு புடைக்கக் குடி.

குடி-3 : (பட்டையை நீட்டி) இந்தா ஐயா, போடு இதிலே ஒரு கால் படி.

கள் விற் : (விடுகிருன்) போதுமா ?

குடி-3 : (குடிக்கிருன்.)

குடி-4 : (பட்டையை நீட்டி) விடு இதிலே ஓர் அரைப்படி.

கள் விற் : (விடுகிருன்.) இவ்வளவு காணுமா ? உனக்கு.

குடி-4 : (குடித்துவிட்டு)குடி கெடுக்கும் குடி(மற்றவரைப் பார்த்து) இதை நன்ருகக் குடி.

குடி-5 : (பட்டையை நீட்டி) விடு இதிலே ஒரு முக்கால் படி.

கள் விற் : (விடுகிருன்.)

குடி-4 : (ஆடிக்கொண்டே பட்டையை நீட்டி இன்னும் விடு) அரைப்படி.

கள் விற் : (விடுகிறான்.)

குடி-4 : குடித்துக்கொண்டே (மற்றவரைப் பார்த்து) அடேய் குடி கெடுத்த குடி-குடி-குடி. நன்றாகக் குடி.

குடி-5 : [பட்டையை நீட்டி] விடு இதிலே ஒரு முக்கால் படி.

கள் விற் : [விடுகிறான்.]

குடி 4 : [ஆடிக்கொண்டே பட்டையை நீட்டி] விடு இன்னும் அரைப்படி.

கள் விற் : [விடுகிறான்.]

குடி 4 : [குடித்துக்கொண்டே] வாங்கடா பயல்களே, தேன் மாதிரி இருக்கிறது. எல்லோரும் குடியுங்கள், பிறகு ஆடுங்கள்.

குடி-5 பேர்களும் : [ஆட்டம் போடுகிறார்கள்.]

பாட்டு

குடி-4: குடிக்க குடிக்க ஆட்டம் வரும்—ஆனால்
குடித்து விட்டால் குடிகெடுக்கும்
குடியை மட்டும் மறக்காதே—தம்பி
குடி குடித்தால் குடி கெடுக்கும்.

மற்றவர் 4 பேர்களும் } ஆமாம். ஆமாம். குடி கெடுக்கும் - ஆனால்
குடிக்காமல் இருக்கவேண்டாம்.

குடியாதவன் : [குடித்துவிட்டு ஆடுபவர்களைப் பார்த்து] அடேய் அப்பா, என்னடா இது. குடியைக் குடிகெடுக்கும் என்று சொல்லிக்கொண்டே குடித்துக்கொண்டு ஆடுகிறீர்கள்.

குடி-1 : [அனைவரையும் பார்த்து] டேய், எல்லாரும் உட்காருங்கள். ஐயா, என்னமோ சொல்லப் போகிறார், என்னவென்று கேட்போம்.

குடி-5 பேர்களும் : [உட்காருகிறார்கள்.]

குடி-4 : [குடியாதவனைப் பார்த்து] என்னய்யா சொன்னப் போகிறால்...ங்...[வாய் தடுமாறி] சொன்...னு, சொன்னு.

குடி-2 : ஆமாம். [வாய் தடுமாறி] துள்ளு - சொன்னு.

குடியாதவன் : குடியைக் குடி கெடுக்கும் என்று சொல்லிக் கொண்டே, குடிக்கிறீர்களே! இதன் பொருள் என்ன ?

குடி-4 : நான் சொல்லுகிறேன். குடித்தால் குடியெல்லாம் கெட்டுப்போகும் என்று சொல்லுகிறேன். இதன் பொருள் குடிக்கக் கூடாது.

குடியாதவன் : தெரியாமல் ஒரு குற்றத்தைச் செய்தவனை மன்னிக்கலாம், தெரிந்து குற்றஞ் செய்பவனை மன்னிக்க முடியாது.

குடி-4 : நாங்களா சொல்லுகிறோம், அரசு சொல்லுகிறது. குடி குடியைக் கெடுக்கும் என்று கள்ளுக்கடையில் எழுதி வைத்துக் கொண்டு, குடிக்கும்படி பறைசாற்றுகிறது.

குடி-4 : என்ன சொல்லுகிறாய் ? நான் உன்னை ஒன்று கேட்கிறேன், விடை சொல் பார்ப்போம்.

குடியாதவன் : கேள், விடை சொல்லுகிறேன்.

குடி-4 : மதுவிலக்கு இருக்கும்போது, குடித்தால் குற்றந்தானே ?

குடியாதவன் : ஆமாம்.

குடி-4 : குடித்தால் அப்போது சிறையில் தள்ளுவார்கள்! அப்படித் தானே !

குடியாதவன் : ஆமாம்.

குடி-4 : இப்போது மதுவிலக்குச் சட்டத்தை எடுத்துவிட்டார்கள். எனவே, இப்போது குடியாமல் இருப்பது குற்றம், உனக்குத் தெரியுமா அது ?

குடி-5 பேர்களும் சேர்ந்து : [ஓ-என்று சிரிக்கிறார்கள்]

குடி-4 : அதனால்தான் குடிக்கிறோம்.

குடி-4 பேர்களும் : ஆமாம்......ஆமாம். அதற்காகத்தான் குடிக்கிறோம்,

குடியாதவன் : அரசு உங்களை ஏமாற்றுகிறது.

குடி-2 : எப்படி ?

குடியாதவன் : குடித்து நீ கெட்டால் நாங்கள் பொறுப்பில்லை, நாங்கள்தாம் குடிக்கக் கூடாதென்று கள்ளுக்கடையில், அதாவது 'குடி குடியைக் கெடுக்கும்' என்று எழுதி வைத்திருக்கிறோம். அதனால் அரசு 'ஏன் குடித்தாய்' என்று உன்னைக் கேட்கும்.

குடி-1 : அடா ! நீ ஓர் ஆள்.

குடி-4 : பின் ஏனய்யா கள்ளுக்கடையைத் திறந்தார்கள் ?

குடி-2 : [கை நீட்டிச் சுட்டி] இவருக்கு என்ன தெரியும் ? பெரிய, பெரிய அறிவாளிகள் சேர்ந்து, நன்றாகச் சிந்தித்துக் கள்ளுக் கடைகளைத் திறந்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் அறிவில்லாமலா திறந்திருப்பார்கள் ?

(தொடரும்)

வரையாப் பெருஞ்சித்திரம் !

அரிமா வளங்கோ, பிரான்சு.

இறைமை பொலியும் தாய்த்தமிழ் அவன்உரு !
இளமை தோய்ந்த உயிரினர்க் கவன்குரு !
நிறைமை வாய்ந்த அறிவின்நற் பெட்டகம் !
நிலவும் கயமையைக் களைந்திடும் நட்பகம் !

அரைசியல் திருத்தும் ஆசான் என்கோ ;
திரைத்தமிழ் கடியும் தீந்தமிழ் என்கோ ,
குறைநிறை உணர்த்திடும் கோள்அரி என்கோ !
குளிர்அருள் பொழிந்திடும் கொடைமழை என்கோ !

இடித்துரை வழங்கி இனநலங் காப்பான் !
இழந்தநம் மரபினை இழையருது மீட்பான் !
வெடிப்புஉரை முழங்கி வெற்றரை மாய்ப்பான் !
விழிப்புடன் நம்மைநல் வழியினில் சேர்ப்பான் !

ஆய்ந்திடும் போதினில் குறள்முனி தோற்றம் !
அறிந்ததை உரைப்பதில் கதிர்முனை ஆற்றல் !
மேய்ந்திடும் இனப்பகை சொற்கணை தாக்கும் !
மெல்லினை அவரையும் விழாது காக்கும் !

சீர்திருத்தக் கோமாளிக் கிறுக்கரை வெருட்டும் !
சிறைக்காட்சி காட்டும் கதைஞரை உருட்டும் !
போர்-ஆட்டம் ஆடும் போலிமை தெருட்டும் !
புரைகாணு வாழ்வால் பொதுநிலை நிறுத்தும் !

குடும்பமே பொதுப்பணி செயும்அறச் சித்திரம் !
கூற்றமும் நடுங்குகுடி செயல்மறச் சித்திரம் !
இடும்பையே பெற்றுஇனங் காக்கும்அருஞ் சித்திரம் !
இதுவரை எவருமே வரையாப்பெருஞ் சித்திரம் !

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகள்
அடங்கிய, கிழமை இதழ்

1.	தனியிதழ்	விலை	உரு.	00—65
2.	ஆண்டுக் கட்டணம்		உரு.	36—00
3.	அரையாண்டுக் கட்டணம்		உரு.	18—00

தொடர்புக்கு : தமிழ் நிலம்—5, அருணாசலத் தெரு. சென்னை 5.

தற்கால இலக்கியத்தில் முற்போக்குப் பார்வை!

மார்க்சிய அறிஞர் : குணா

(ஆசிரியர் குறிப்பு : வரட்டுப் பொதுவுடைமை பேசிகளின் இலக்கிய வெறுமைக் கொள்கையை மிகத் தெளிவாகவும் நுட்பமாகவும், அதே பொழுது மிக அழகாகவும் விளக்குகிறது இக் கட்டுரை. இதை எழுதிய மார்க்சிய அறிஞர் குணா அவர்களின் மேதைமைக்கு இஃதொரு சான்று. அமைவாகப் படித்துப் பாருங்கள் !)

இலக்கியங்கள் தோன்றிய பின்னர்தான் இலக்கணங்கள் தோன்றினவாம். அதேபோல், 'முற்போக்கு இலக்கியங்கள் அடுக்கடுக்காகத் தோன்றிய பின்னர்தான் முற்போக்கு இலக்கியத்திற்கும் ஓர் இலக்கணம் தோன்றியது. இந்த முற்போக்கு இலக்கியத்திற்கு ஒரு தொல்காப்பியராக(!) கார்த்திகேசு சிவத்தம்பி என்னும் தமிழீழத் தமிழறிஞர் இருக்கிறார். அவர் சொல்கிறார்: 'முற்போக்கு' எனும் இச் சொற்றொடர் ஆங்கிலத்தில் வரும் (Progressive) எனும் சொல்லின் மொழிபெயர்ப்பாகும். இச் சொற்றொடர் தமிழ் வரலாற்று வடிவாகவோ தமிழர் வரலாற்று வடிவாகவோ முகிழ்த் தெழும்பிய ஒரு சொல் அன்று; இது மேனாட்டுச் சிந்தனை வழியாக வந்ததாகும்: இதன் காரணமாக, Progressive (புரொகிறசிவ்) எனும் சொல்லுக்கு மேனாட்டுச் சிந்தனை மரபில் எவ்வெக் கருத்து இணைவுகள் சேர்க்கைகள் உண்டோ, அவை யாவும் இத் தமிழ்ச் சொல்லினுள்ளும் திணிக்கப்பட்டுள்ளமையை நாம் அறிந்துகொள்ளலாம். மொழி பெயர்ப்புத் தொடர்கள் இத்தகைய பொருளில் பயன்படுத்தப்படுவதனை மொழி பெயர்ப்பியலில் மாற்றீடு (Transference) எனக் குறித்தல் வேண்டுமெனக் கேட்ஃபோர்ட் (Catford) என்பார் கூறுவார்.'

இந்த முற்போக்கு இலக்கியத்தின் உள்ளீடுகள் இம் மூன்றும்:

1. உலகத்தையும் அதனுடைய இயக்கத்தையும் மாற்றத்தையும் பற்றி அறிவியல் வழியில் விளக்குவது ;

2. மாந்தனை முதன்மைப்படுத்துவது.

3. மாந்த ஆற்றலின் முழுப் பொலிவையும் வெளிக்கொணர ஏதுக்க வாழ்விடமாக உலகத்தை மாற்றுவதற்கு ஏற்ற வழிமுறைகளைக் காட்டுவது.

இத்தகைய வளர்ச்சி நிலையை மார்க்சிய மெய்யியலைக் கொண்டுதான் பெறமுடியுமென சிவத்தம்பி வரையறுக்கிறார்.

இவர் சொல்கிற இலக்கண அமைதிகள் இன்றைய முற்போக்குத் தமிழ் இலக்கியத்தில் எந்த அளவுக்கு இருக்கின்றன? பார்வையில் இருக்கிறதோ இல்லையோ முற்போக்கு அகப்பையைத் துழாவுவது மட்டும் ஓயாது நடக்கிறது.

சிவத்தம்பியின் இலக்கணத்தின்படி இங்குள்ள பொதுவுடைமையர்கள் ஆக்குகின்ற 'சிவப்பு' இலக்கியம் மட்டுமே முற்போக்கு இலக்கியமாகும். சிவப்பு இலக்கியமெனில் இவர்களின் கட்சி இலக்கியத்தைத்தான் குறிக்கும்.

தமிழகப் பொதுவுடைமை இயக்கத்திற்கு அப்பால் இருந்தவலர் ஒப்புரவுக் கொள்கையைத் தழுவியும் தழுவாமலும் நன்றாகவே எழுதியதும் உண்டு. வல்லரசு எதிர்ப்பு, தேசிய விடுதலை, பெண் விடுதலை, சாதி எதிர்ப்பு, கடவுள் மறுப்பு, கோயில் மட எதிர்ப்பு, மூடநம்பிக்கை எதிர்ப்பு, பார்ப்பனர்எதிர்ப்பு போன்ற சார்பு நிலைகளில் வந்த எழுத்துகளையும் கூட முற்போக்கு இலக்கியமென்னும் கருத்தாக்கத்திற்குள்தான் அடக்கவேண்டும். தமிழகத்தில் விளங்குகிற சமூக அவலங்களிலிருந்தும் முரண்பாடுகளிலிருந்தும் பூசல்களிலிருந்தும் கொடுமைகளிலிருந்தும் விடுபெற உதவவல்ல ஒரு வருங்காலப் பார்வையின் பல கூறுகள் இவற்றிலும் உண்டு. ஆனால், கட்சிக்காகதான் கொள்கையேயன்றி கொள்கைக்காகக் கட்சி இல்லையெனச் சொல்லி, அடம்பிடிக்கிற தமிழகப் பொதுவுடைமையர்களோ முற்போக்குப் பட்டத்தைத் தங்களின் தனியுடைமையாக்கிக் கொண்டுவிட்டனர். கதவைத் தாழ்ப்பாளிட்டுக்கொண்டு தங்களைத் தவிர வேறு முற்போக்குகளில்லையெனச் சொல்லி வருகின்றனர். இதுதான் இலக்கியத்தில் குறுநெறியியம் (Sectariaism) என்பதாகும். இந்தக் குறுநெறியியம் முற்போக்கு இலக்கியத்தின் இயல்புகளில் ஒன்று.

தற்கால இலக்கியம் தமிழில் எங்கிருந்து தொடங்குகிறது? ஆங்கிலேயர்கள் கொண்டு வந்த தரகு வணிக முதலாளியம் பின்னர் வந்தேறி முதலாளியமாக அகல விரிந்தது. அப்போது நிலக்கிழமை உறவுகளின் வேர்கள் பல அறுந்தன. அன்று வந்த அச்சுத் தொழிலும், தாளிகைகளும், ஆங்கிலக் கல்வியும் தமிழகத்தில் தோற்றுவித்த புதிய சூழலில் தற்காலப் பாக்களும் புதினங்களும் நாடகங்களும் சிறுகதைகளும் மலர்ந்தன. ஐரோப்பியர்கள் தமிழகத்தை அடிமைப்படுத்தி ஆளத்தொடங்கியது முதல் தோன்றிய இத்தகைய தமிழ் இலக்கியங்களைத்தாம் தற்கால இலக்கியமெனச் சொல்கிறோம். இந்நிலையில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த வள்ளலாரின் பாடல்களில் சாதி சமய எதிர்ப்பு என்னும் நிலையில் முற்போக்குக் கூறுகள் இல்லையா? பாரதியின் பாடல்களிலும் இங்குமங்கும் முற்போக்குத் தன்மைகள் இல்லையா? பாரதிதாசனின் பாடல்களில் முற்போக்குக் கருத்துகள் ஒலிக்கவேயில்லையா? புதுமைப்பித்தன் போன்றோரின் சிறுகதைகள் முற்போக்கு இலக்கியத்திற்குள் அடங்குவனவல்லவா?

இத்தகைய முற்போக்குத் தமிழ் இலக்கியத்தைத் 1. தொடக்க நிலை இலக்கியங்கள், 2. திராவிடர் இயக்கச் சார்பு இலக்கியங்கள்

1-2. கா. சிவத்தம்பி, இலக்கியத்தில் முற்போக்குவாதம், பாட்டாளிகள் வெளியீடு, சென்னை 21 [1978], பக்கம் 12-13.

3. பொதுவுடைமை இயக்கச் சார்பு இலக்கியங்கள் - என மூவகையாக வகைப்படுத்திக் கொள்ளலாம்.

பார்ப்பனரல்லாதார் இயக்கம் திராவிடர் இயக்கமாகத் திரிந்தது. பின்னர் அத் திராவிடர் இயக்கம் ஒரு பெரிய பிளவுக்கு உள்ளானது. இந்நிலையில், சாதி எதிர்ப்பு, வடவர் வல்லரசு எதிர்ப்பு போன்ற உத்திகளுடன் தோன்றிய திராவிட இலக்கியத்தின் பெரு வளர்ச்சியிலும்கூட பல நல்ல கூறுகள் இருந்தன. ஆயினும், இவை யாவும் கட்சிக் கொள்கைப் பரப்பு இலக்கியங்களாகவே குறுகி நின்றன. இத்தகைய பரப்பல் இலக்கியம் [Propagandist Literature] பல்லாயிரக் கணக்கான இளைஞர்களைத் திராவிடக் கொள்கையை நோக்கி ஈர்த்தது. அண்ணாவின் வேலைக்காரி, இரங்கூன் இராதா, போன்ற படைப்புகளும் கருணாநிதியின் பராசக்தி, தூக்குமேடை போன்ற எழுத்துகளும் திரைப்படக் கதை இலக்கியங்களாகப் புகழடைந்தன. பொன்னி என்னும் திங்கள் இலக்கிய இதழ் திராவிட இலக்கியத்திற்கு நல்ல பணியாற்றியது. ஆயினும், இத்தகைய திராவிட இயக்க அணியினரால் உலக இலக்கியமென சொல்லத்தக்க அளவுக்கு ஓர் இலக்கியத்தையும் படைத்தளிக்க முடியவில்லை.

ஆழமான ஒரு மெய்யியல் பார்வையும் அரசியல் கோட்பாடுகளும் இல்லாத திராவிட இயக்கத்தின் படைப்புகளில் உயரிய ஆக்கத் தன்மை இருக்கவில்லை. உலகை ஈர்க்கவல்ல இலக்கியத் தரமும் செறிவும் இல்லை. நுண்மையும் வலிய உள்ளாற்றலும் இல்லை. இவ்வாறு இல்லாமைக்குக் காரணங்கள் உண்டு. அந்த இயக்கத்தினுடைய மெய்யியல் வறுமையே அதற்கான பெரிய காரணமாகும். தமிழ் மண்ணோடும் தமிழ் மக்களோடும் ஒட்டிய ஒரு பற்றுக்கோடு அத் திராவிட இயக்கத்திற்கு இருந்தது உண்மை தான். அதனால், தன்னுடைய மெய்யியல் வறுமையிலிருந்து எளிதில் மீண்டு ஆக்கமும் ஆள்வினையும் மிக்க செழுமையான படைப்பிலக்கியங்களை அந்த இயக்கத்தால் ஆக்கித் தந்திருக்க முடியும். ஆனால் அவ்வாறு நடக்கவில்லை. அவ்வாறு நடக்காததற்கு சில காரணங்கள் உண்டு. அவை :

1 இயங்கியல் அறிவுக்குப் புறம்பான கொச்சைப் பொருண்மையியத்தைத் [Vulgar materialism] தழுவிய வரட்டு நாத்திகம்;

2 பார்ப்பனிய ஒழிப்பை நோக்கமாகக் கொள்ளாமல் பார்ப்பனர் எதிர்ப்பை மட்டுமே முதன்மைப்படுத்திய பார்ப்பனரல்லா மேல்சாதியினரின் நலன்கள் இங்கு மேலோங்கி நின்றது;

3 காந்தியை முதலில் எதிர்த்த இந்த இயக்கம், பார்ப்பனிய வணிக நலன்களைப் பேணுவதற்கென்றே வடிக்கப்பட்ட காந்திய வழிமுறையை எதிர்க்காமல், அக் காந்தியைவிட மிகையாக அக் காந்தியத்தில் முக்குளித்துக் கிடந்தது;

4 இதனால், புரட்சிப் போராட்ட முறைகளை
கொள்கைப் பரப்பு அளவில் மட்டுமாகிய சீர்தி

ஒப்போலே வேட்டை அரசியலிலோ முற்றாக மூழ்கி நின்றதால் வந்த புரட்சி மரபின்மை ;

5 திராவிடமென்பது ஒரு தேசிய இனத்தைக் குறிக்காது. இதனால் இதற்குத் தனி தேசிய எல்லைகள் இருக்கவில்லை. அஃதாவது, அதற்கென ஒரு களன் [Space] இல்லை. திராவிடமென்னும் கருத்தாக்கத்தைப் பிற தென்னிந்திய தேசிய இனங்கள் ஏற்றுக் கொள்ள மறுத்தன. பார்ப்பனரல்லதார் இயக்கமோ உள்ளடக்கத்தில் தமிழகத்தில் வாழ்கின்ற தெலுங்கரின் நலன்களையும் தலைமையையும் பேணுகிற இயக்கமாகவே வளர்ந்தது. இத்திராவிட உணர்ச்சியால் தமிழகத்தில் வாழ்கிற தெலுங்கர்கள் தாம் பொதுவாக தங்களின் பொருளியல் அரசியல் நலன்களை வளப்படுத்திக் கொண்டனர். இத் திராவிடக்கொள்கை தமிழ்த் தேசிய இனவுணர்வை மழுங்கடித்தது.

தமிழகத்தின் விடுதலையைக் கருவாக வைத்து ஒரு விடுதலை மெய்யியலைச் செறிவுடன் வளர்த்துக்கொள்ளாத நிலையில், ஆக்க இலக்கியங்களைப் படைக்கிற வாய்ப்பு இத் திராவிட இயக்கத்திற்கு இல்லாமல் போனது.

தமிழகப் பொதுவுடைமை இயக்கத்தவர் படைத்த முற்போக்கு இலக்கியத்தை அடுத்து எடுத்துக்கொள்வோம்: பஞ்சும் பசியும் எழுதிய சிதம்பரம் இரகுநாதன், வல்லிக்கண்ணன் செயகாந்தன் போன்றோரின் எழுத்துகள், சீவானந்தம், பட்டுக்கோட்டைக் கலியாணசுந்தரம் போன்றோரின் பாட்டுகள் ஆகியன இங்குக் குறிப்பிடத்தக்கன. இந்த இலக்கியங்கள் யாவும் 'வருக்கம் வருக்க' மென வலிந்து ஒரு வகுப்பு [Class] விளக்கத்தை ஏற்றிச் சொல்லப் பார்க்கின்றன. முழுப் பூசனிக்காயை சோற்றில் மறைப்பது போல், சாதிபோன்ற முதலாளியத்திற்கு முந்திய வகுப்பினைகளைப் பொய்யாக மறைத்து, மேற்கத்திய வாய்ப்பாடுகளைக்கொண்டு வந்து, தமிழக வாழ்வியலின் மீது செயற்கையாகத் திணிக்கின்றன. இவற்றில் கொச்சைப் பொருளியல் விளக்கங்கள் தாம் வாளோங்கி விளங்குகின்றன. மெய்யியல் உள்ளடக்கமும் நுட்பமும் ஒப்புரவு அழகியலும் இலக்கிய உள்வீடும் கற்பனை நயமும் குறைவு; கரட்டுத்தனமான கட்சி அரசியல் பரப்புத் தன்மை மிகுதி. இதனால் குமுக உறவுகள் யாவும் வெற்றுப் பொருளியல் உறவுகளாக மட்டுமே சுருக்கிக் காட்டப்படுகின்றன. எந்திரவியல் பார்வையோ மிகுதி. விளைப்பாற்றல் கொள்கையைத் [Theory of productive forces] தழுவியனவாக அவை இருக்கின்றன, உதிரித் தன்மைகளும் கூடுதலாக உண்டு.

குறிப்பாக, செயகாந்தனின் கதைகளை எடுத்துக்கொண்டால் அவற்றில் வருகிற தலைவனும் தலைவியும் பிற தலைமக்களும் பொதுவாக தொழிலகப் பாட்டாளியராகவோ உழவர்களாகவோ இல்லை. இழுவண்டிக்காரர்கள் [ரிக்சாக்காரர்கள்], பரத்தைகள், சட்டைப்பைத் திருடர்கள், சிறைப் பறவைகள், இரவலர் போன்ற உதிரிப் பாட்டாளியரே கதை உறுப்பினர்களாக வருகின்

றனர். இத்தகைய உதிரிகளை இலக்கிய உறுப்பினர்களாக வடிப்பதில் இவர் போன்றோருக்கு இருக்கிற கவர்ச்சியே, பின்னர் பார்ப்பனிய நலன்களிடம் பல்லிளிக்கிற வெறுக்கத்தக்க போக்கில் இவர்களுடைய முற்போக்கை வழிச் செலுத்தியது. இறுதியில், அக்கிரகாரப் பண்பாட்டின் புறக்கடையில் விழுந்து கிடக்கிற எச்சில்களை மேய்ந்துத் தின்று திரிகின்ற அகந்தைப் போக்கிலும் பிற்போக்குத்தனத்திலும் சிலந்தி வலையில் சிக்குண்ட ஈப் போல் இவர் போன்றோர் இரையாக நேர்ந்தது:

திராவிட இயக்கத்திடமிருந்த மெய்யியல் வறுமை ஆக்க இலக்கியத்தில் அதற்கொரு பங்கு இல்லாமல் செய்ததென்னவோ உண்மைதான். ஆனால், உலகளாவி வளர்ந்த செழுமையான இயங்கியல் மெய்யியல் மரபுக்குச் சொந்தம் கொண்டாடுகிற தமிழக முற்போக்குகளேகூட உலகைக் கவர்கிற அளவுக்கு ஆக்கமும் செறிவும் வளமும் கொண்ட இலக்கியத்தைத் தமிழில் இதுவரை படைத்தளிக்க முடியாதது ஏன்? இவர்கள் பண்பாட்டு வளமில்லாதவர்களாகவும் இலக்கிய மலடுகளாகவும் இருப்பதற்கு காரணம் என்ன ? இந்த நிலையில் இவர்கள் தங்களின் வரட்டு இலக்கியங்களுக்கு முற்போக்கு வண்ணம் பூசிக்கொள்வதேன் ? அடுத்தவன் வீட்டுப் பூ என்றுமே மணக்காது என்ற நினைப்பில், இவர்கள் தங்களின் ஏட்டுப் பூக்கள் (காகிதப் பூக்கள்)தாம் தாழம் பூக்களெனச் சொல்லி பொய் வீரம் பேசுவதேன்?

வரட்டியரின் முற்போக்கு இலக்கியத்திற்கு இயல்பான இலக்கணங்களைப் பார்த்தால்தான் இந்தப் பொய்த் தோற்றத்தின் உண்மை விளங்கும். அவ்விலக்கணங்களை இனி வரிசைப் படுத்துவோம் :

1. நாடும் மொழியும் அற்றவர்கள் :

இந்த முற்போக்குகளுக்கு முதலில் மொழிப்பற்றோ, நாட்டுப் பற்றோ பொதுவாகக் கிடையா. இதனால், இவர்களுக்குப் பண்பாட்டு நயமும் மாதிரியும் கிடையா. ஒரு தேசிய வரம்பும் இவர்களுக்கு இல்லை. நாடு என்றோ, தேசமென்றோ வரம்பறியாத இவர்களின் மூளையும்கூட, கடன் வாங்கிய சரக்காகும். தமிழ் அறிவு மரபும், பண்பாட்டு மரபும் அற்ற இவர்கள் மார்க்சையே ஒரு பகடி [கேலிப்] படமாக்கிக் காட்டுகின்றனர். தமக்கென ஒரு வீடும், ஊரும் அந்த ஒரு கோவணமுண்டியோ, நாடோடியோ 'வானமே என் கூரை; இப் பரந்த உலகமே என் வீடு' என இல்லாததற்குச் சொந்தம் கொண்டாடினால் எவ்வாறிருக்கும்? 'யாதும் ஊரே, யாவரும் கேளீர்' என அவன் உலகத்துக்குச் சொந்தம் பாராட்டினால் சிரிப்பு வராதா? இவ்வாறுதாம் இவர்களின் கூற்றுகளும் கூட இருக்கின்றன. நாடு என்னும் ஒரு களமும் வரம்பும் இல்லாமல் புரட்சியைச் செய்யப் போகிறோமென வெறுங்கையில் முழம் போடுகிறவர்கள் இவர்கள்.

மார்க்சைப் பற்றி இவர்களுக்கு முழுமையாகத் தெரியாது. **1847 ஆம் ஆண்டில் வெளிவந்த பொதுவுடைமைக் கட்சி அறிக்கையில்** மார்க்சும் எங்கெல்லாம் "பாட்டாளி வகுப்பிற்கு நாடென யாதுமில்லை" எனச் சொல்லிவிட்டனர். அதனால், இவர்கள் மொழியென்றும், நாடு என்றும், மொழிப்பற்று என்றும் நாட்டுப்பற்று என்றும் சொல்லப்படுவன வெல்லாம் முதலாளியக் [பூர்சுவா] கருத்துகள் என்பார்கள் ஒருலகம், ஒரு ஞாயிறு, ஒரு குடும்பம், ஓரண்டம் என வானத்தில் முழம் போட ஆலாய்ப் பறக்கிற இவர்கட்கு, செருமனி நாட்டின் மீதும், செருமானிய மொழியின் மீதும் மார்க்சும் எங்கெல்சும் வைத்திருந்த ஆழ்ந்த பற்றைப்பற்றி ஒன்றுமே தெரியாது. முதல் [Capital] என்னும் நூலைப் போன்று ஓர் அரிய நூலை, ஒரு செருமானியரால் தாம் ஆக்கித்தர முடியுமென எங்கெல்சு செம்மாந்து சொல்வதைப்பற்றி இவர்கட்குத் தெரியாது. § அறிவியல் ஒப்புரவு [சோசலிச]க் கொள்கையே ஒரு செருமானியச் சரக்குதானென அவர் பெருமைப் பாராட்டிக் கொண்டதைப் பற்றியும் தெரியாது. ‡ தாம் ஆக்கிய முதல் என்னும் நூல் தம் போன்ற ஒரு தனியாரின் முயற்சி பெற்ற வெற்றியெனச் சொல்வதை விட, தம்முடைய செருமனி நாடு பெற்ற வெற்றியென்றே சொல்ல வேண்டுமென, மார்க்சு ஒருகால் எங்கெல்சுக்கு எழுதியதைப்பற்றியும் † இவர்கட்குத் தெரியாது. இத்தகைய பண்பாட்டு வேரற்றவர்களின் முற்போக்கு இலக்கியம் எத்தகையதாக இருக்க முடியும்? வரட்டுத்தனமான துண்டுத் துண்டுப் பொருளியல் கூற்றுகளையும், உத்திகளையும் தழுவிய கொச்சைப் பொருளியத்தின் சோற்று வழி நிற்பவனவாக அஃது இருப்பதில் புதிரொன்றும் இல்லை.

நாடு எனின் 'பாரத'மென்றே இவர்கட்குப் பொருள்படும்: தேசிய இனங்களைப்பற்றி மார்க்சியம் புகட்டுகிற விளக்கத்துடன் பார்த்தால், இந்தியா என்றுமே ஒரு நாடாகாது. ஆயினும், அவ்வழியில் தமிழகம் ஒரு தனி நாடு (தேசம்) என்பதை

---

§ Engel's review of Marx's Capital, Volume I, published in Demokratisches Wochenblatt on March 21, 1868, quoted by Jose' P. Miranda in his 'Marx against the Marxists' SCM press, London WC [1980], p 258.

‡ Preface to the first German edition of 'Socialism:' 'Utopian and Scientific' [1882], ibid, p 258.

† Marx's letter to Enegls dated February 20, 1866, ibid, p 259.

6. J.V. Stalin, 'Marxism and Problems of Linguistics' Foreign Languages Press, peking [1972]

இந்த முற்போக்குகள் ஏற்கமாட்டார்கள். தமிழ்த் தேசியமென்ருலே இவர்களுக்குக் குமட்டும். இதனுல், 'தமிழ்த்தேசிய இலக்கியம்' என ஒன்றில்லை என்பார்கள் இவர்கள். பின்னர் 'பாரத'மென்னும் புதிய பார்ப்பனீய சூழ்ச்சியாகிய பொந்துக்குள் போய் அடங்கி விடுவர். இவர்களுடைய முற்போக்கு இயக்கியத்திற்கு நாடு எனவோ, தேசம் என்றோ சொல்லவல்ல நிலையைத் தழுவிய தமிழ்த் தேசியத்தன்மை இல்லை. இவர்களுடைய முற்போக்கு இலக்கியமே இதனுல் ஒரு நாடோடி இலக்கியம்தான்.

2. மொழியியல் குழப்பம் :

மொழியென்ருல் என்னவென்று இந்த முற்போக்குகளைப் பார்த்துக் கேளுங்கள்; கருத்துகளைப் பரிமாறிக்கொள்ள உதவுகிற ஒரு கருவி யென்பதற்கு அப்பால் மொழியினுல் ஒரு பயனுமில்லை என்பார்கள். மொழியையும் பண்பாட்டையும் சோற்றுக்குள் முடக்கி அடக்கி விடுவோர்கள். வாழ்வியலின் அடித்தளம் பொருளியலாயின், இம் மொழி அடித்தளத்தில் அடங்காதாம்; அந்த அடித்தளத்தின் மீது கட்டப்பட்டுள்ள மேற்கட்டுகளில் ஒன்ருகவும் இருக்காதாம். மொழியைப் பற்றி இவ்வாறு சொல்லிய இசுடாலினுடைய இயங்காவியல் விளக்கமே இவர்களின் திருமறை. இவர்கள் சொல்வதைப் போன்று, மொழி ஒரு கருவி மட்டுமாயின், சொல்ல வேண்டிய பொருள் மட்டும்தான் முதன்மையானதாக இருக்கும். அக் கருத்தைச் சொல்வதற்கு ஒரு செப்பமான வடிவமும் அழகியல் தன்மையும் தேவையில்லை. அவ்வாறு சொல்ல ஒரு நெறியும்முறையும் தேவையில்லை; மண்வெட்டி போன்ற ஒரு கருவி வளர முடியாது. அதேபோல், மொழியும்கூட வளர முடியாது. அத்துடன் மொழிக்கு ஒரு வகுப்புச் சார்போ சாதிச் சார்போ இல்லையாம். அம் மொழிக்கு இலக்கணமும்கூட தேவையில்லையாம். அதனுல், 'இலக்கணத்தைத் தூக்கிக் குப்பையில் போடு?' என்பர் இந்த முற்போக்குகள். இந்த மட்டுக்கு அவர்கள் குழப்பக்காரர்களாக (anarchists) இருக்கிருர்கள். ஆனுல் புரட்சிக்காரர்களாக இல்லை.

இந்த முற்போக்குகளில் ஓர் உட்சாதி உண்டு. மார்க்சிய இயங்கியலிலிருந்து அயற்பட்டு மேலை முதலாளியம் கண்ட அழிவுக் கழிசடைகளையும் எந்திரவியல் போக்குகளையும் தின்று வாழ்கிற மீமிசை மாந்தர்களாக(!) இவர்கள் இருக்கின்றனர். இருத்தலியம் (Existentialism), கட்டமைப்பியம் (Structuralism) போன்ற குழப்படிகளை இரவல் வாங்கி வந்து பின்தங்கிய தமிழ்க் குமுகத்தின் மீது வலியச் சுமத்திவிட்டுத் தாங்கள்தாம் முற்போக்குகளுக்கெல்லாம் முற்போக்கு எனத் தம்பட்டம் அடித்துக்கொள்கிற உதிரி அறிவர்கள் (Jumpon Intellectuals) இவர்களெனின் அது தவருகாது.

செத்துக்கொண்டிருக்கிற மேலை முதலாளியக் குழலில் எவரோ பெற்றெடுத்துத் திரிய விட்டுப்போன இலக்கண இலக்கிய

ஒழுங்கிலாப் பா நடையில் புதுப்பாடல், ('புதுக்கவிதை') என்னும் உதிரி இலக்கியமே இவர்களின் ஐந்தாவது வேதம்.

அழியாது நிற்கவல்ல ஓரிரு பாடல்களை இங்குக் காணுங்கள்:

'சோதனை வருவது உங்கள் சாதனைகளையெல்லாம்
சரித்திரமாக்கவே'[7].

'ரொம்பவும் துள்ளாதே நிதானமாகப் போ...
உன் முட்டி எலும்புகள் என் கண்களை
முட்டிக்கொண்டு கண்ணீர் வரும்...' [8]

'ஓ! உன் தேசத்தில்தான்
அழுகைகளுக்கும் ஓய்விருப்பதில்லையே' [9].

அழகிய புதுப் பாடலாக வருகிற ஓச்சிமின்னின் பாடலின் தமிழாக்கம் ஒன்றைப் பார்ப்போமா?

'நமது மலைகள் என்றும் சீவித்திருக்கும்!
நமது ஆறுகள் என்றும் சீவித்திருக்கும்!
நமது மக்கள் என்றும் சீவித்திருப்பார்கள்!

அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் தோற்கடிக்கப்பட்டவுடன்

இதனினும் பத்து மடங்கு அழகாக
நமது தேசத்தை நாம் கட்டுவோம்.' [10]

ரோசாவை அதன் முட்களோடு சேர்ந்துதான்
அங்கீகரிக்கிறோம்; ஆனால் உதிர்வது பூ மட்டும்தானே!'11

என்ன உட்பொருள் பார்த்தீர்களா? நெஞ்சை மயக்குகின்ற வடிவம் இல்லையா? முற்போக்குப் பாலைவனத்தில் பூ விரித்த பூக்காச் செடிகளாய்ப் புதுப் பாடலை வளர்க்க ஓயாத ஊற்றாக வருகின்ற கருத்துச் சுரப்புக் காணீர்; முற்போக்கு அறிவு வளத்தை ஆழம் பார்க்க இவை போதாவா? [தொடரும்]

7-9. மு. மேத்தா, முன்னுரைகள், வர்மா பதிப்பகம், சென்னை-17 [1983].

10. தீச்சுடர், மே 1985.

11. செந்தூரம், ஆகஸ்டு 1984.

அன்பர்கள் கவனிக்க....

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டுபேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலையில் 5-மணிக்குமேல், எழுதி இசைவுபெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக்கொள்கிறோம். — அமைச்சர்.

பாட்டடா! என்றன் பாட்டடா....!

— பாவலர் இளஞ்சித்திரன்

பாட்டடா! என்றன் பாட்டடா! உன்றன்
பார்வையில் வீரம் ஊட்டத்தான்! - ஒரு
பட்டியில் கிடைகள் நாமிலை என்பதைப்
பாரினர் அறியக் காட்டத்தான்!
கேட்டடா, தம்பி, கிளர்ந்தெழு வாய்நீ!
கேடுசெய் வடவனை ஓட்டத்தான்! - நம்
கேளிராம் தமிழ இனவிடு தலைக்குக்
கிளர்ச்சித் தீயை மூட்டத்தான்!

எழுத்தடா! என்றன் எழுத்தடா! உன்றன்
எழுச்சியை நேரில் பார்க்கத்தான்! - அட,
இனநலங் காக்க இணைந்தார் தமிழர் -
என்றறிந் தெதிரிகள் வேர்க்கத்தான்!
கழுத்தடா தூக்கிக் காதைக் கொடு!முன்
கனன்றெழு, பகையைத் தீர்க்கத்தான்! - இந்திக்
கழுதையைத் துரத்து! தமிழ்விடு தலைசெய்!
களங்கந் துடை,புகழ் சேர்க்கத்தான்!

உணர்வடா! என்றன் உணர்வடா! உன்றன்
உடலினில் சூட்டை ஏற்றத்தான்! - நீ
உயர்வர லாற்றை உடையவன் என்பதை
உலகம் தெரிந்து போற்றத்தான்!
உணர்த்தடா கைகளை உயர்த்தடா! தம்பீ,
உன்மத இழிவுகள் மாற்றத்தான்! - நில
உருண்டையில் உன்நிலம் உனக்கென ஆக
உண்மையாய்த் தொண்டுகள் ஆற்றத்தான்!

பேச்சடா! என்றன் பேச்சடா! உன்றன்
பிணக்குகள் யாவையும் போக்கத்தான்! - தமிழ்ப்
பெருநிலம் மீட்கப் பிரிவில ராய்ஒரு
பிணையலில் தமிழரை ஆக்கத்தான்!
ஏச்சடா! தம்பி, இந்தியா, ஒற்றுமை
என்பதெல் லாம்உனைத் தீர்க்கத்தான்! - அந்த
இனிப்புரைக் கிளகா தெழத்தான் வேண்டும்!
இன்றுயிர்த் தமிழகம் பூக்கத்தான்!

மூச்சடா! என்றன் மூச்சடா! உன்றன்
மொழிஇனம் விடுதலை வாங்கத்தான்! - உன்
முதுகினை நிமிர்த்தி உடல்முறுக் கேற்று!
மொய்ம்புகள் வளர்ந்திங் கோங்கத்தான்!

பெண்ணின் நெஞ்சாங்குலை!

(இது கதையன்று. நெஞ்சாங்குலை நோய் மருத்துவரின் பார்வையில், பெண்ணின் நெஞ்சாங்குலையும் அதன் செயற்பாடுகளும் விளக்கப்படுகின்றன.)

பெண்ணின் நெஞ்சாங்குலை எவ்வாறிருக்கும்? ஆணின் நெஞ்சாங்குலையைக் காட்டிலும் 10-15 விழுக்காடு அது சிறியது. அதன் தசைப் படிவமும் மெல்லியதாகவிருக்கிறது. எனவே பெண்ணின் நெஞ்சாங்குலைத் திறன், ஆணின் நெஞ்சாங்குலைத் திறனைவிடக் குறைவே. குறைவான திறனுக்கு மற்றொரு காரணமும் உண்டு. உயிர்வளி (Oxygen)யினை அது நிமையத்திற்கு 2·9 பதினம் (லிட்டர்)தான் உள்வாங்குகிறது; அஃதாவது, ஆண்(இருதயம்)நெஞ்சாங்குலை உள்வாங்குவதைவிட 20விழுக்காடு குறைவாகவே அஃது உயிர்வளியை எடுத்துக்கொள்கிறது. கடினமான உடலுழைப்பின்போது; உயிர்வளியை உள்வாங்குவது படிப் படியாக அதிகரிக்கிறது. ஒருகுறிப்பிட்டமட்டத்தை எட்டியபின்னர் உழைப்பு அதிகரித்தாலும்கூட, உயிர்வளி உள்வாங்குவது நின்று விடுகிறது. அதனால், அதிகக் களைப்பு ஏற்பட்டு விடுகிறது.

பெண் எவ்வகை உடல் உழைப்பிலும் ஈடுபடாமல், ஓய்வாகப் படுத்துக்கொண்டிருக்கும்போது, நிமையத்திற்கு 5·5 பதினம் குருதியை நெஞ்சாங்குலை வெளியேற்றம் செய்கிறது. ஆணாகவிருப்பின் இந்த அளவு 7·8 பதினம் ஆகும்.

இந்த விளக்கங்களிலிருந்து பெண்ணின் குருதிக் குழல்கள் வலுவற்றவை என்று தெரிய வருகிறது.

பெண்ணின் வாழ்க்கையில், இரண்டு கால கட்டங்களில் குருதி ஓட்ட மண்டலம், பெரும் தகைவுக்கு உள்ளாகிறது. ஒன்று அப்பெண் பூப்படையும் பருவத்திலும், மற்றொன்று அவளின் இனப்பெருக்க ஊக்கிகள் மறையும் காலத்திலும் ஆகும். எனினும், எல்லாப் பெண்களிடத்தும், இந்தக் காலகட்டங்களில் குறிப்பிடத்

(முன் பக்கத் தொடர்ச்சி)

போச்சடா இன்றுடன் புன்மைச் சாதிகள்,
புதைத்திடு அவையினை நீங்கத்தான்!
புடம்வைத் தெடுத்த பொன்போல் ஒளிர்க!
புதிய தமிழ்நிலம் தாங்கத்தான்!

உழைப்படா! என்றன் உழைப்படா! உன்றன்
உயர்ச்சியைக் கண்டுளம் ஆடத்தான்! - இந்த
உலகினில் உன்தமிழ்க் கொடிஉன் நிலத்தில்
உரிமை அரசைச் சூடத்தான்!

அழைப்படா ஏற்பாய்! அருமைத் தமிழனே,
அமைந்தஉன் களத்தினில் கூடத்தான்! - வா! வா!
டானைஉன் நடைகண் டத்தனைப் பகையும்
அரண்டொரு திசையினில் ஓடத்தான்!

தக்க, நெஞ்சாங்குலே குருதி ஓட்ட விளைவுகள் ஏற்பட்டுத்தான் ஆக வேண்டுமென்பதில்லை.

பூப்படையும் காலத்து,ஒத்திய நீர்மங்களின் தாக்குதல்களால் உடலில் குறிப்பிடத்தக்க, இயற்கையான மாற்றங்கள் பெண்க ளிடத்தே ஏற்படுகின்றன. உடலிலுள்ள பல சுரப்பிகளின் உயிர்(ஆர்மோன்) ஊக்கிகளில் மாற்றங்கள்உண்டாகின்றன. நெஞ் சாங்குலே ஊக்கியைக் கட்டுப்படுத்தும் நரம்பு மண்டல ஒழுங் கமைப்பு, ஓரளவு தாக்கப்படுகிறது; இதன் விளைவாக, நெஞ்சாங் குலேப் பகுதியில் வலி தோன்றக்கூடும்; நாடித் துடிப்பு மிகுதியா கிறது; மூச்சுயிர்ப்பின்போது துன்பம் ஏற்படுகிறது; விரைவில் களைப்பும் மேலிடுகிறது.

பொதுவாக, இவையனைத்தும் சிறிது காலத்தில் தானுகவே சரியாகிவிடக்கூடும். பொதுவாகவே பெண்கள் பூப்படையும் போது அவர்கள் உயர் வகுப்புகளில் பயின்று கொண்டிருப்பர் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். அந்த நேரத்தில் கல்விச் சுமை மிகுந்திருப்பதனாலும் அவர்கள் விரைவிலேயே களைப்பெய்த வாய்ப்பு உண்டு. இத்தகைய பருவத்தில் பெண்களின் நெஞ் சின் குருதி ஓட்ட மண்டலத்தில் ஏற்படக்கூடிய தாக்கங்களைத் தவிர்ப்பதற்குச் சரிவிழுக்காட்டு உணவு, போதுமான தூக்கம், நல்ல ஓய்வு, தகுந்த உடற்பயிற்சி, விளையாட்டு, குடும்பத்தில் நேயமிகுந்த அமைதியான நட்புறவுச் சூழல், பெற்றோர்களின் பரிவான போக்கு ஆகியவை இன்றியமையாததாகும்.

அகவை முதிர்ந்த காலத்தில் மாதவிடாய் முற்றிலும் நீங்கும் போது ஒரு பெண்ணின் நெஞ்சாங்குலேக் குருதி ஓட்ட நரம்பு மண்டலங்கள் அதிகமான தாக்குதலுக்குள்ளாகின்றன. இனப் பெருக்க ஊக்கிகள் முழுமையாக அற்றுவிடுவதற்கான தொடக்கக் கால கட்டமே அது. இயல்பாக இந்தக் காலத்தில் பெண்களுக்கு அயற்சியும் மயக்கமும் ஏற்படுவதோடு அவர்களது நெஞ்சாங் குலேத் துடிப்பும் அதிகரிக்கிறது.

மூட்டுகளிலும் தசைகளிலும் இனங்காண முடியாத வலியும், தூக்கமின்மையும், உணர்ச்சிப் பெருக்கும், அமைதியற்ற தன்மை யும் இன்னும் பல உளக்கோளாறுகளும் இக்கால கட்டத்தில் அவளது முழுமையும் அவளுக்கு அறிவுறுத்தப்படுகிறது. அஃதாவது ஒரு குடும்பத்தில் அவளது முகாமை குறைந்துவிட்டதாக அவளே கருதத் தொடங்குகிறாள். இந்தக் கால கட்டத்தில் ஏற்படும் நெஞ்சாங்குலே அரத்தவோட்டக் கோளாறுகள் எவ்வளவு காலம் நீடிக்கும் என்று அறுதியிட்டுக் கூற முடியாது. சிலருக்கு அது பல ஆண்டுக்காலம் நீடிக்கலாம்.

தற்போது இத்தகைய நெஞ்சாங்குலேக் கோளாறுகளின் சிறப்புத் தன்மைகளை விளத்தமாகவும், துல்லியமாகவும் அளவிடு வதற்கான வசதிகள் உள்ளன. நெஞ்சாங்குலேப் பகுதியில் பொதுவாக எப்போதும் இருந்துவரும் வலியும், உடல் வெப்பநிலை மிகுதிப்பாடும் பெண்ணிற்கு 'மையோகார்டியல் இன்ஃபார்க் சன்' ஏற்பட்டுவிட்டதோ என்ற ஐயத்தைத் தோற்றுவிக்கக்கூடும்.

இதனைச் சரியானபடி வரையறுத்துவிட்டால், சில ஒத்திய மருந்துகளைக்கொண்டு நிறைவுற்ற குணத்தை ஏற்படுத்தி விடலாம். இந்தக் கால கட்டத்தில் பெண்ணைச் சூழ்ந்திருப்பவர்கள் அவளிடம் சிறப்புப் பரிவுடன் நடந்து கொள்ளவேண்டியது இன்றியமையாதது.

இவற்றிலிருந்து பெண்களின் நெஞ்சாங்குலை அரத்தவோட்ட அமைப்பு வலுக்கேடானது என்ற முடிவுக்கு வரக்கூடாது. மிகத் தீவிரவான பரவலான நெஞ்சாங்குலை நோய்கள் தோன்றுவதை அது வியப்பான முறையில் எதிர்த்தும் நிற்கிறது.

தற்காலத்தில் மாந்த குலத்தின் முதன்மை எதிரிகளாக மருத்துவ உலகில் கருதப்படுபவை, 'ஏத்திரோக கிளிரோசிசு', நெஞ்சாங்குலைப் பற்றுக்குறை, 'இசுடெனோகார்டியா' போன்ற அத்துடன் தொடர்புள்ள நோய்களே.

இவையனைத்தும் ஆண்களைக் காட்டிலும் பொதுவாக பெண்களிடம் ஐந்து மடங்கு குறைவாகவே காணப்படுகின்றன. சில குறிப்பிட்ட அகவையினரிடையே இது இருபது மடங்கு குறைவாகவேயுள்ளது. ஆண், பெண் இனச்சிறப்பு வேறுபாடுகளே இதற்குக் காரணமாகும். பெண்ணின் ஒத்திய நீர்மங்கள், உடலில் 'ஏத்திரோக களிரோசிசு' நோய் ஏற்படுவதைத்தடை செய்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. தற்காலத்தில் நெஞ்சாங்குலை 'இன்ஃபார்க்சன்' மென்மேலும் அதிக இளைஞர்களிடம்காணப்படுகிறதேயன்றி, இளம் பெண்களிடம் காணப்படுவதில்லை. முதியவர்களிடம்கூட; அந்நோய் ஆண்களைக் காட்டிலும், பெண்களிடம் 10 மடங்கு குறைவாகவே உண்டாகிறது.

ஒத்தியல் நீர்மம் தன்மை தவிர இதற்கு மற்றொரு காரணமும் உண்டு. உடல் உழைப்பற்ற தசையியக்கம் உள்ள மிகக்குறைவான ஆண்கள்தாம்பெரும்பாலும் நெஞ்சாங்குலைநோயால்பீடிக்கப்படுகிறார்கள். போதுமான உடல் உழைப்பின்றி, தசைஇயக்கம் பெரிதும் குறைந்துள்ள நிலையில்தான் நெஞ்சாங்குலை நோய்களைத் தூண்டும் உயிர் வேதியக் கோளாறுகள் தோன்றுகின்றன. பெண்கள் எப்பொழுதும் வீட்டு வேலையில் ஈடுபட்டிருப்பது அவர்களுக்கு ஓரளவேயேனும் தசை இயக்கத்தைத் தருகிறது.

பரவலாகக் காணப்படும் மற்றொரு நெஞ்சாங்குலை அரத்த ஓட்ட மண்டல நோய், அரத்த மிகு அழுத்தமாகும். மொத்தத்தில் இந்நோயால் ஆண்களும் பெண்களும் சம அளவிலேயே (5:3 விழுக்காடு) தாக்கப்பட்டுள்ளனர். ஆனால் நாற்பது அகவைக்குக் குறைவானவர்களிடம், ஆண்களிலேயே அதிகம் பேர் இதனால் தாக்கப்பட்டுள்ளனர். நாற்பது அகவைக்குமேல், பெண்களில் பலர் இந்நோயால் பீடிக்கப்படுகின்றனர். இதற்கு ஒத்தியல் நீர்மம் விளைவுடன் அதிக உப்புச் சேர்ந்த பண்டங்களை உண்பதும் காரணமாகவிருக்கலாம். சோடியம் அயனிகள் அதிகரிப்பது தமனிக் குழல்களில் படிவதால் அரத்தமிகு அழுத்தம் ஏற்படுகிறது.

இவைதாம் ஒரு பெண் நெஞ்சாங்குலையின் சிறப்புத் தன்மைகளாகும். பெண்கள் மட்டுமன்றி ஆண்களும் இதனைத் தெரிந்து கொள்வது நல்லது. 0

பொதுவுடைமை !

— தரங்கை பன்னீர்ச்செல்வன்

உண்மையான பொதுவுடைமை உரிமையிலே தோன்றும் ;
ஒழுக்கத்தைப் பண்பாட்டை உயர்த்திக்கால் ஊன்றும் ;
மண்ணுகும் முற்றுரிமை மார்க்கியத்தில் நோக்கு ;
மதமறுப்பும் மடமொழிப்பும் பொதுவுடைமைப் போக்கு ! 1

வறியோரைச் சுரண்டிடுவோர் வரலாற்றை மாற்றும் ;
வாய்த்தவெல்லாம் நக்குகின்ற நாய்க்குணத்தைத் தூற்றும் ;
அறியாமைப் புதைசேற்றுள் அழுந்தியோரைத் தூக்கும் ;
அறிவியலின் முழுப்பயனை வாழ்வியலாம் ஆக்கும் ! 2

படிமத்தைக் கடவுளெனும் படுகொலையைத் தடுக்கும் ;
பகுத்தறிவுக் கொவ்வாத பழமரபை ஒடுக்கும் ;
அடிமைநோய் பரப்புகின்ற ஆணவத்தை விழ்த்தும் ;
அனைவர்க்கும் அனைத்துமெனும் அரசியலை வாழ்த்தும் ! 3

மார்க்சியத்தை இலெனியத்தை மக்களுக்கே ஊட்டும் ;
மதப்போர்வை நரிக்கும்பல் மாளத்தீ மூட்டும் ;
போர்க்குரலை எழுப்பிடுவோர் எவரையுமே ஊக்கும் ;
பொதுவாழ்வில் தவறிழைப்போம் எவனெனினும் தாக்கும் ! 4

பொய்கூறி ஒப்போலை பொறுக்கிட எண்ணாது ;
போலியரை வேலியெனப் புரட்டுரைபண்ணாது ;
நெய்நாற தான்முந்தி நிறைந்திடவுண்ணாது ;
நிலைதாழ்த்தும் கயமைகளை நிலைத்திடவொண்ணாது ! 5

தென்மொழி

சென்னை—5

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல்நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம் :	15 உருபா	35 உருபா	40 உருபா
அரையாண்டுக் கட்டணம்:	18 ,,	8 ,,	25 ,,
தனியிதழ் :	1-25 ,,	3-00 ,,	4-00 ,,

ஓரிதழுக்கு உருபா 2-50 மேனி முன்பணம்
கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

பெற்றோர்கள் கவனத்திற்கு :

குழந்தைகளின் மனவளர்ச்சி

'என்ன மதிப்பெண் வாங்கியிருக்கிறாய்? அறிவனைப் பார். வகுப்பில் முதலாமவனாக வந்திருக்கிறான். செம்மல் மட்டைப் பந்தாட்டத் தலைவனாகி விட்டான். ஆனால், நீ எதற்கும் பயனில்லை. உனக்குச் சிறிய வேலைதான் கிடைக்கும். உன்னால் எங்களுக்குத் தலைக்குனிவு'

— என்று பெற்றோர் குழந்தையைக் கடிந்துகொண்டபோது 14 அகவைச் சிறுவன் மொய்ம்பன் அறையின் ஒரு மூலையில் உட்கார்ந்து விசும்பிக் கொண்டிருந்தான்.

படிப்பில் முதலாவதாக வரவேண்டும்; கட்டுப்பிடியாக இருக்க வேண்டும் என்று பல குழந்தைகளைப் பெற்றோர்கள் சிறுமைப் படுத்தியும் திட்டியும் இழிவாகப் பேசி வருகிறார்கள்.

குழந்தைகள் மனத்தை நோகடிக்கச் செய்வது குமுகத்தின் எல்லா மட்டத்திலும் பரவலாக இருக்கிறது. இஃது எவ்வளவு தூரம் குழந்தையின் வளர்ச்சியைத் தாக்குகிறது என்பதை அதிகம் பேர் உணர்வதில்லை.

21 அகவையான கலையரசி, அண்மையில் ஓர் அழகான பையனுக்குத் திருமணம் செய்ய உறுதிசெய்யப்பட்டாள். அவள் முகத்தில் பருக்கள் இருந்ததால் அவள் எப்பொழுதும் அழகில்லாதவள்; யாருமே திருமணம் செய்துகொள்ள மாட்டார்கள் என்று வீட்டிலுள்ளவர்கள் அவளைப் பகடிசெய்து வந்தனர்.

'எனக்கு இத்துணை அழகான கணவர் கிடைப்பார் என்று நான் எதிர்பார்க்கவில்லை' என்று அவள் சொன்னாள்.

இவளைப்போல் பெண்கள் பலர் நிறம் குறைவாக இருப்பதாலோ, மெலிவான உடல்கட்டு இல்லாது போனாலோ அழகற்றவர் என்று குமுகத்தில் மட்டம் தட்டப்படுகிறார்கள்.

'நீ அழகாக இல்லை', 'உன்னை எனக்குப் பிடிக்கவில்லை', நீ மதிப்பெண் குறைவாக வாங்குகிறாய்' — என்றெல்லாம் குழந்தைகளைக் கடிந்துகொள்ளும்போது குழந்தைகளுக்குத் தன்னம்பிக்கை குறைந்து முடிவில் பெற்றோர்களுக்கு ஏமாற்றம் தரும் வகையிலேயே நடந்துகொள்ளுகிறார்கள்.

குழந்தைப் பருவப் பட்டறிவுகள்தாம் வளர்ச்சியடைந்த பிறகு குணத்தை உருவாக்குகின்றன. குழந்தைப் பருவத்தில்தான் அடிப்படையான மதிப்பீடுகள் எல்லாம் (Basic Values) — எது போற்றத்தக்கது; எது கவனத்துக்குரியது என்ற மதிப்பீடுகள் ஊட்டப்படுகின்றன.

இந்த அடிப்படை வலிவாக இல்லாவிட்டால், தன்னம்பிக்கை இல்லாது போய் மனக்கோளாறுகளும் ஏற்படுவதுண்டு!

குழந்தைகள் மனம் நோகும் வகையில் பேசினால் குழந்தைகளின் வாழ்க்கைக் கண்ணோட்டமும் தாக்கப்படும் என்பதைப் பெற்றோர்கள் உணர்வதில்லை.

குழந்தைகளிடமிருந்து அதிகம் எதிர்பார்க்கும் பெற்றோர்கள் அவர்களை ஊக்குவிக்கும் வகையில் பேசுவதில்லை.

'நீ வகுப்பில் 5-ஆவது தகுதி பெற்றிருக்கிறாய். ஆனால் நீ முதலாவதாக வந்தால்தான் எனக்கு மகிழ்ச்சி' என்று சொன்னால் குழந்தையின் மனம் மாறிவிடுகிறது (பேதலித்து விடுகிறது. பெற்றோர்கள் எதிர்பார்க்கும் முதலிடத்தைத் தன்னால் பெற இயலுமா, இயலாதா என்ற கவலை குழந்தைகள் மனத்தை ஆட்கொண்டு விடுகிறது.

பெற்றோர்கள் குழந்தைகளிடம் நல்லொழுக்கத்தை எதிர்பார்க்கிறார்கள். பாலுணர்வுத் தொடர்பான பொத்தகங்களைப் படிக்கக்கூடாது; அவற்றைப் படித்தால் ஒழுக்கம் கெட்டுவிடும் என்று தடை இடுகிறார்கள். இத் தடை 'குழந்தைகளை ஒரு குற்ற உணர்வுக்கு உள்ளாக்கித் தங்களைப்பற்றி வெட்கப்படும்படியாகச் செய்துவிடுகின்றது. குழந்தைகளுக்கு இயல்பாகவே கமுக்கங்களைக் கண்டுபிடிக்கும் ஆசையிருப்பதினால், தடையிடப்பட்ட பொத்தகங்களை அவர்கள் தேடிப் பிடித்துப் படிக்கிறார்கள். இதைப் பெற்றோர்கள் ஏனோ உணர்வதில்லை.

உணர்ச்சி அளவில் மனத்தை நோக அடிப்பதால், குழந்தைகளின் தன்மை மாறிவிடுகிறது. பெற்றோர்களின் கெடுபிடியும் முரண்பாடான உத்தரவுகளும் குழந்தைகளின் மனவளர்ச்சியைத் தாக்குகின்றன.

குழந்தைகளை நட்புணர்வுடன் நெருக்கமாகச் சேர்த்துக் கொள்ளாமல் அவர்களைப் பொருட்படுத்தாமல் தள்ளியே வைத்து நடத்துவது (பெரும்பாலாரின்) வழக்கமாக இருக்கிறது. பெற்றோர்களைப் போலவே குழந்தைகளின் தன்மையும் உருவாகி அவர்களும் விலகிப்போய் விடுகிறார்கள்.

பெற்றோர்களிடம் பாராட்டுகளை எதிர்பார்ப்பதற்குப் பகரமாக அவர்களின் தண்டனைகளிலிருந்து தப்புவது என்பதே குழந்தைகளின் கருத்தாகி விடுகிறது.

'குழந்தைகளுக்குப் பயிற்சிதர முற்படும்போது நீங்களும் பயில வேண்டும். குழந்தைகள் தவிர்க்க வேண்டும் என்னும் செய்திகளை நீங்களும் தவிர்க்க வேண்டும்' என்று பிளாட்டோ கூறுகிறார்.

பெற்றோர்களிடையே முறிவு, அவர்கள் அன்பு கிடைக்காமல் போவது, ஒழுங்குபற்றித் தவறான உணர்வு ஆகியவை குழந்தைகள் கெட்டுப்போவதற்குச் சில காரணங்களாகச் சொல்லப்படுகின்றன.

மேலும் குழந்தைகளிடமிருந்து அதிகமாக வெற்றிச் செயல்களை எதிர்பார்க்கும் பெற்றோர்களானாலும் குழந்தைகள் தவறான பாதையில் செல்கிறார்கள்.

இக்காலத்தில் குழந்தைகளுக்காகப் பெற்றோர்கள் நேரத்தைச் செலவிடுவதில்லை. வேலையிலிருந்து களைத்துப்போய் வீடு திரும்புபவர்களுக்குக் குழந்தைகள் சொல்லும் கருத்துகளைக் கேட்கும் பொறுமை இருப்பதில்லை. வீட்டு வேலைகளும், வேலைச் சுமைகளும் சேர்ந்து கொள்கின்றன. குழந்தைகளிடம் அன்பு காட்டத் தெரியாதவர்கள், அவர்கள், குழந்தைகளாக இருந்தபோது ஒருவேளை அன்பைப் பெறாதவர்களாக இருந்திருக்கலாம்.

குழந்தைகளிடம் கடுமையாக நடந்துகொள்வதைத் தவிர்க்க வேண்டுமென்றால், அவர்களுக்கு வாழ்க்கையை அமைத்துக் கொடுத்தால் மட்டும் போதாது. அவர்கள் எதிர்பார்ப்பவை அன்பும் அக்கறையுந்தாம்.

இயல்பாகவே குழந்தைகளுக்கு ஆர்வம் அதிகம். தாங்கள் அறிந்ததை விரிவாகச் சொல்ல விரும்புவார்கள். அவர்கள் கேட்கும் முடிவில்லாத கேள்விகளுக்குப் பெற்றோர்கள் விடை சொல்ல வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள்.

குழந்தைகளுடன் பழகும்போது பெற்றோர்களுக்குப் பொறுமை இருக்கவேண்டும். பெற்றோர்களைப்போல, குழந்தைகளிடம் அறிவு முதிர்ச்சியை எதிர்பார்க்க முடியாது. குழந்தைகளிடம் செலவிடும் நேரம் எவ்வளவு முக்காமையோ, அவ்வளவு முக்காமை அதைப் பயனுள்ளதாக்குவதுமாகும்.

குழந்தைகளுக்குத் தம்மைப்பற்றி முழுமையான கருத்து கிடையாது. மனத்தளவில் முதிர்ச்சி உடையவர்களும் அல்லர். மற்றவர்களைச் சார்ந்தே இருப்பார்கள். எனவே, அவர்களை ஒதுக்கி விடுவதனால் மிகவும் ஏமாற்றமும் தோல்வி மனப்பான்மையும் அவர்களுக்கு ஏற்பட்டுவிடும்.

குழந்தைகளின் அறிவுக்கூர்மை, வெற்றிச்செயல்கள், இவற்றுக்காக மட்டுமே அல்லாமல், அவர்கள் உங்கள் குழந்தைகள் என்பதற்காகவே அவர்களை நேசிக்க வேண்டும்.

'குழந்தைகள் விரும்புபவர்கள் தாங்கள்- பின்பற்றத்தக்க எடுத்துக் காட்டானவர்களைத்தாம்; அவர்களைக் குறை கூறுபவர்களை அன்று.' (Children have more need of models than of Critics) என்று சோபர்ட்டு என்னும் மெய்ப்பொருளறிஞர் கூறுகிறார்.

— உரோமி பகல்

— நன்றி 'தினமணி' 26-10-85

வரும், பணிந்துவிட்டது போலவும், இனி வெறும் அரசியல் தீர்வு என்று சிறிதும் தமிழீழ மக்களுக்குப் பயன்படாது, தீர்வை ஏற்றுக்கொள்ளப் போவது போலவும் ஒரு மாயை நிலவுகின்றது. எத்தனையோ, உயிர் ஈகங்களையும், இழிவுகளையும் ஏற்ற நம் தமிழ்க் குழுகாயம் ஈழத்தில் இனிச் சிங்களவரோடு சேர்ந்துதான் வாழவேண்டுமா? துமுக்கி ஏந்திய போராளிகள் சோர்வடைந்த தன் காரணியம்தான் என்ன? செய்தித்தாள்கள் வாயிலாகப் படிக்கும் செய்திகள் எங்களுக்கே இத்துணை இன உணர்வும், மொழி உணர்வும் ஏற்பட்டுத் தனி ஈழம்தான் சரியான தீர்வு என்று வந்த பிறகு, கொடுமைகளை நேரில் பட்டவர்கள் சோர்வதேன்? இதன் பின்னணி என்ன என்பதே எமக்கு உணர்த்துவீர்களாக?

— சூரியமூர்த்தி, கல்பாக்கம்.

[ஆசிரியர் குறிப்பு: தாங்கள் நினைப்பதுபோல் நிலைகள் புறத்தளவில் சோர்வடைந்தனவாகத் தெரிவது ஓரளவு உண்மையே. ஆனால், அகத்தளவில் தமிழீழப் போராளிகளிடமோ எவ்வகைச் சோர்வும் இல்லை. இந்திய, இலங்கை அரசுகளின் நடவடிக்கைகள் கரவும் சூழ்ச்சிகளும், தந்திரங்களும் நிறைந்தனவாக இருப்பதாலும், அவற்றுக்குச் சரிநிகராக நம் போராளிகளின் நடவடிக்கைகள் இல்லாமையாலும் இன்றைய நிலைகள் சிறிது மனச்சோர்வு கொள்ளும்படி உள்ளன. விரைவில் நிலைகள் மாறுதல் அடையும். பொறுமையாய் அமைவோடிருந்து கண்காணித்து வரக் கேட்டுக்கொள்கிறேன். ஊக்கம் இழக்கவேண்டாம். பெரிய முயற்சி. பலவகையிலும் நிலைமை கைகூடி வருதல் வேண்டும். காலமும் பொருந்துதல் வேண்டும் இல்லையா?

ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேரும் தகைத்து. -ஆசிரியர்]

0 : 1136 : அன்புமிக்க ஐயா வணக்கம். தங்களின் நட்பு எனக்கு மிகவும் தேவை. என்னவெனில், நான் சில காலமாகவே 'தென்மொழி' இதழைப் படித்து வருகிறேன். நான் புரட்சிப் பாவேந்தர் பேரன், கோ. தென்னவன் எழுதிக்கொண்டது. 'பொது உணர்வுகளில் தமிழர்கள்' என்ற தலைப்பு அருமை! அதன் கருத்தும், உரைகளும் அருமை! படித்தேன். நன்று.

— கோ. தென்னவன், சென்னை.

0 : 1137 : பேரன்பிற்கும், பெருமதிப்பிற்கும் உறிய ஐயா அவர்கட்கு, வணக்கம். கடந்த 7-8-85 அன்று, பல்லடத்தில் 'இளைஞர் நற்பணி மன்றம்' என்னும் அமைப்பின் அமைப்புக் கூட்டம் நடைபெற்றது அதன் செயற்பாடுகள் பற்றி அனைவரிடமும் கருத்துக் கேட்கப்பட்டபொழுது, ஓர் அன்பர் மன்ற நடவடிக்கை தமிழில் நடைபெற வேண்டும். அனைவரும் தமிழில் கையொப்பமிட்டால் சிறப்பு எனக் கருத்து தெரிவித்தார். அதை மிகச் சிலர் எதிர்த்தனர். [வந்திருந்த அறுபதில் நான்கு ஐந்து பேர்] எனவே, கையொப்பமும் அவரவர் விருப்பம் என முடிவு செய்யப்பட்டது என்றாலும், முசுலீம் இருவர் [உருதைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள்] மன்ற அமைப்பாளரைத் தனியே சந்தித்து மன்றத்தில் மொழிச் சிக்கல் எழுந்துவிட்டது எனவே, மன்றத்தின் பெயரையே 'பிரண்ட்ஸ் அசோசியேசன்' என மாற்ற வேண்டும் எனக் கூறவே அமைப்பாளர் அவ்வாறு ஆங்கிலத்தில்

(தொடர்ச்சி அட்டை 4-ஆம் பக்கம்)

வைப்பது சரியன்று என உறுதியாகக் கூறவே, அவர்கள் இருவரும் பொறுப்புகளில் [துணைத் தலைவர், செயலர்] இருந்து விலகி 'இந்தியன் பிரண்ட்ஸ் அசோசியேசன' என்னும் ஒரு தனி அமைப்பை ஏற்படுத்தினார்கள். எப்படி அவர்களின் தனனலம் பேணும் எச்சரிக்கை உணர்வு! நாம் எச்சரிக்கையாகச் செயல்பட வேண்டும். —சு. சுப்பிரமணியன், பல்லடம்.

0: 1138 : போன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய பாவலரேறு ஐயா அவர்களுக்கு வணக்கம். பள்ளப்பட்டி மேனிலைப் பள்ளியின் தாளாளர். 'முகமதியர்களாகிய நாங்களும் தமிழர்களே', என்று கூறிய கூற்று எண்ணி மகிழத்தக்கதாகும். இவ்வாறு இந்நாட்டிலுள்ள முகமதியரல்லாரும கூறும் நாளொன்று வருமோ? வைப்பகம், அஞ்சலகப் படிவங்களில் தமிழ் இடம்பெறச் செய்ய உ.த.மு.க. சார்பில் தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதுபோன்ற நோக்குடைய வேறு இயக்கங்களுடன் சேர்ந்தும் முயலச் செய்யலாம். கொள்கைப் பற்றும் மொழிப் பற்றும் மிக்குடையவர்களாக இருந்து, பின் அவற்றிலிருந்து வீழ்ந்தவர்களைப் பற்றிய செய்தி எமக்கு வேண்டா. அஃது தேவையுமன்று. எங்கும் எதிலும் பதர்கள் உண்டு. வீழ்ச்சியுற்ற இனம் எழுச்சி கொள்ள இருளில் மயங்கி நின்று, விடியலுக்கு ஏங்கிக் காத்திருக்கும் எந்தமிழர், ஒளிமிக்க வழிகாண இறுதிவரை உறுதி குலையாமல், உள்ளந்தளராமல் வாழ்ந்த, வாழும் மாவீரர்களைப்பற்றிய செய்திகளையே அள்ளி வழங்குங்கள்; காலால் உதைத்துத் தள்ள வேண்டியவற்றைக் கைகளில் எடுத்து வைத்துப் பார்த்து வருந்துவதால் பயனுண்டோ? தலையின் இழிந்த மயிரனைய மாந்தரின் நிலையினைப் பெரிதுபடுத்த வேண்டா! தாங்கள் மனந்தளர்ந்தால் நாங்கள் என்ன செய்வோம்? நன்றி! தங்கள் அன்புள்ள,

— செந்தமிழ்வாணன், கீரனூர்.

0: 1139 : தனித் தமிழ்க் கதிரே! தென்மொழி இதழில் சொல்லாய்வு அறிஞர் அவர்கள் தமிழ்ப்பல்கலைக்கழக அகராதி வெளியீட்டாளராக அமர்த்தப்பட்டமை அறிந்து மிகவும் மகிழ்வுற்றேன். தக்க நேரத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கையால் தமிழனை இன்புறவரள். அறிஞர் அவர்கள் தமக்கிட்ட பணியென இதை எண்ணித் தமிழனைக்குத் தொண்டு செய்வார்களாக. தென்மொழி இயக்க நடவடிக்கைகள் எப்படி இருக்கின்றன? இங்கு பறம்பை அறிவன் வருவார்; அவருடன் பல நிலைகளில் கலந்துரையாடியிருக்கின்றேன். உண்மையான தமிழினம் நாடும் ஒரு சிலர் இப்போது உங்களை நன்கு புரிந்துள்ளனர். ஈரோடைக்கு வரஇயல வில்லையே என வருந்துகின்றனர் சிலர்: இனி இது போன்ற நிகழ்ச்சிகட்கு என்னுடன் ஒருசிலராவது வருவர். தமிழீழத்தில் நடைபெறும் கொடுமைகள் விரிந்து கொண்டே போகின்றன. என்று முடிவுக்கு வருமோ? தெரிந்திலதே!

அன்புத் தம்பி,— மெய். அருண்மொழியன்; இராமேசுவரம்.

0: 1140 : பெருமதிப்பிற்குரிய ஐயாவுக்கு, வணக்கம். சென்ற மாத இதழ்களைப் பெற்றேன்; படித்தேன்; பாடல்கள் வெளிப்படையாக வீரஞ்செறிந்து இருக்கின்றன. அவற்றின்

(தொடர்ச்சி 8ஆ- ஆம் பக்கம் பார்க்க)